|| 𑌶𑍍𑌰𑍀𑌃 ||

|| 𑌶𑍍𑌰𑌿𑌯𑍈 𑌨𑌮𑌃 ||

|| 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌹𑌯𑌗𑍍𑌰𑍀𑌵𑌾𑌯 𑌨𑌮𑌃 ||

|| 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃

ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகனருளிச்செய்த

ஷழாவத்ர ரஹஸ்யம்.

ஸ்ரீஉக்ஷ ரஹஸ்ய சாதுர்கா.

ஸ்ரீ ம த் ர ஹ ஸ் ய மா த் ரு கை.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑌨𑌾𑌥𑌾𑌰𑍍𑌯𑌃 𑌕𑌵𑌿𑌤𑌾𑌰𑍍𑌕𑌿𑌕𑌕𑍇𑌸𑌰𑍀 ।
𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌵𑌰𑍍𑌯𑍋 𑌮𑍇 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌤𑍍𑌤𑌾𑌂 𑌸𑌦𑌾 𑌹𑍃𑌦𑌿 ॥
𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌦𑌯𑌾𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌭𑍂𑌷𑌣𑌮𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑌨𑌾𑌥𑌾𑌰𑍍𑌯𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌦𑍇𑌶𑌿𑌕𑌮𑍍 ॥

சீரொன்று தூப்புற் றிருவேங்கடமுடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள்—ஓரொன்று
தானே யமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு.

நேரிசை வெண்பா.

அப்படி நின்ற வமலன்படி யெல்லாம்
இப்படி யெம்முள்ளத் தெழுதினார்—எப்படியும்
ஓரார் சுருதியொளி யாலிருணீக்கும்
தாராபதி யணைந்தார் தாம். 12

இந்த ஸ்ரீமத் ரஹஸ்ய மாத்ருகையில் ரஹஸ்யத்ரயங்களில் ஏற்படுகிற அர்த்தங்களின் ஸாராம்ஸத்தை க்ரமமாகச்சேர்த்து எல்லோரும் அநுஸந்திக்கும்படி அருளிச்செய்யத் திருவுள்ளம் பற்றி இப்படி அர்த்த விசேஷங்களைத் தமக்கு அறிவித்த ஆசார்யர்களின் விஷயமாக ஒரு மங்களம் அருளிச்செய்கிறார்—

'அப்படி நின்ற' என்றாரம்பித்து. இத்தால் அர்த்தாத் அவர்களிடத்தில் உபகாரஸ்ம்ருதியும் செய்யப்பட்டதாகிறது. எப்படியும் - எந்த விதத்தாலும், ஓர் - விசாரிக்கப்பட்டதான, ஆர்-பூர்ணமான, கருதி - வேதமாகிற, ஒளியால் - ப்ரகாசத்தினால்,இருள் நீக்கும் - அஜ்ஞானமாகிற இருட்டை நீக்குகிற, தாராபதி-சந்திரனைப் போன்ற ஆழ்வார்களை, அணைந்தார் தாம் - ஆச்ரயித்தவர்களான ஸ்ரீமந்நாதமுனிகள் முதலான நம் ஆசார்யர்கள், அப்படி நின்ற - அவ்விதமாக நிற்கிற, அமலன் - ஹேயகுணங்களுக்கு விரோதமான ஸ்வபாவத்தையுடைய பகவானுடைய, படியெல்லாம் - ப்ரகாரங்களெல்லாவற்றையும், இப்படி - மேலே சொல்லப்போகிற விதமாக, எம்முள்ளத்து - எம்முடைய மனதிலே, எழுதினார் - ப்ரதிஷ்டிதமாக்கினார். 'எப்படியும், ஓர், ஆர்' என்கிற விசேஷணங்களினால் ப்ரதானமாநகத்தில் அருளிச்செய்திருக்கிறபடியே வேறொரு ப்ரமாணத்தை அபேக்ஷிக்காமல் எல்லா ஜனங்களையும் எளிதில் தெளிவிக்கக்கூடிய விஷயத்தில் - அத்விதீயமானது த்ராவிடவேதம் என்பது தெரிவிக்கப்படுகிறது. 'ஏர் ஆர்' என்னும் பாடாந்தரம். அப்பொழுது 'ஏர்' என்பதற்கு அநுரூபமான என்றர்த்தம். அதாவது பகவானுடைய குணங்களை யதாவத்தாக ப்ரதிபாதிக்கிறதற்கு அநுரூபமானவைகள் ஆழ்வார்களின் ஸ்ரீஸூக்திகள் என்று தாத்பர்யம். 'ஏற்கும் பெரும்புகழ் ஆயிரத்துள் இவையு மோர்பத்து' என்றாழ்வார் தாமே யருளிச்செய்திருப்பது இங்கநுஸந்தேயம். 'ஆர்' என்பதற்கு 'இன்கவிபாடும் பரமகவிகளால் தன்கவிதான் தன்னைப் பாடுவியாதின்று நன்குவந்து என்னுடனாக்கி என்னால் தன்னை வன்கவிபாடுமென் வைகுந்தநாதனே' என்கிறபடியே வேதங்களினாலு மடங்காத தனக்கும் அடங்காத கவிகள் இவைகள் என்று தாத்பர்யம். 'உறப்பல இன்கவி' என்பதிங்கநுஸந்தேயம். 'எப்படியும்' என்பதற்கு மாதுர்யகாம்பீர்யாதி குணங்களினால் என்றர்த்தம். 'கருதியொளியாலிருள் நீக்கும்' என்பதற்கு ச்ருதியாகிற ப்ரமாணங்களைக்கொண்டு அஜ்ஞானமாகிற இருட்டை நீக்குகிற என்றர்த்தம். 'தாராபதி' என்பதற்கு சந்திரனைப் போன்ற பூர்வாசார்யர்கள் என்று பொதுவாக அர்த்தமாவுமாம். சந்திரனை த்ருஷ்டாந்தமாகச் சொல்லி இருப்பதினால் சந்திரன் தன்னிடத்திலிருந்துண்டாகிற நிலவாகிற ப்ரகாசத்தி

திருமந்த்ரத்தில் உருவமாகிய ஒற்றையெழுத்தான முதல் பதத்தில் முதலெழுத்திலே ஸ்ரீயப்பதியினுடைய ஸர்வ ஜகத்காரணத்வமும் (1), ஸர்வரக்ஷகத்வமும் (2), நிருபாதிகசேஷித்வமும் (3), ஜீவனுடைய

னால் உலகத்திலிருக்கும் இருளை நீக்குவதுபோல தங்களால் ப்ரவசனம் செய்யப்பட்ட திவ்ய ப்ரபந்தங்களாகிற ப்ரகாசங்களினால் லோகத்தாரின் இருளை நீக்குகிற ஆழ்வார்களை விசேஷித்துக் குறிக்கிறதாகவுமாம். ஸகல ஸஜ்ஜனங்களுக்கும் ஆஹ்லாதத்துடன் ப்ரகாசத்தை யுண்டாக்குவதுபோல் ஸ்ரீரங்கராஜநந்தநோடு ஸர்வருக்குமெளிதாகத் தெளிவிக்கும்' திவ்ய ப்ரபந்தங்களை இங்கு 'சுருதி' என்னும் பதத்தினால் குறிப்பது உசிதம். 'இப்படி எம்முள்ளத் தெழுதினார்' என்பதினால் 'வெள்ளைப் பரிமுகர் தேசிகராய் அடியோமுள்ளத் தெழுதியது நாங்கள் விட்டனம்' என்று இவர் தாமே அருளிச்செய்திருப்பது ஸூசிப்பிக்கப்படுகிறது. அப்பொழுது அப்படிப்பட்ட ஆழ்வார்களைப் பரம்பரையாக ஆச்ரயித்த அப்புள்ளாரை 'தாராபதியணைந் தார் தாம்' என்பது விவக்ஷிக்கிறது.

இப்படி மங்களாசரணம் செய்தருளி ரஹஸ்யத்ரயங்களில் அநுஸந்தேயங்களான ஸாரார்த்தங்களை க்ரமமாக அருளிச் செய்ய ஆரம்பித்து முதலில் திருமந்த்ரத்தின் ஸாரார்த்தங்களை அருளிச்செய்கிறார்—'திருமந்த்ரத்தில்' என்றாரம்பித்து. 'உருமாகிய ஒற்றையெழுத்தான' என்பதற்கு ஸகல வேதங்களுக்கும் மூலமாகிய மூன்றெழுத்துக்களின் சேர்க்கையாய் ஓர் எழுத்தான ப்ரணவத்தில் என்றர்த்தம். 'ஸர்வஜகத்காரணத்வமும்' என்றது அகாரம் ஸர்வசப்தங்களுக்கும் மூலமாகையினால் ஸர்வ வஸ்துக்களுக்கும் காரணமான பகவானைச் சொல்லுகிறது என்கிற நிருக்தியையநுஸரித்து. 'ஸர்வரக்ஷகத்வமும்' என்றது 'அவ ரக்ஷணே' என்கிற தாதுவில் கர்த்தா என்கிற அர்த்தத்தைச் சொல்லுகிற ப்ரத்யயத்தைச் சேர்த்து 'அ' என்கிற ரூபமாய் அதினாலேற்பட்ட அர்த்தத்தையருளிச் செய்தபடி. 'நிருபாதிகசேஷித்வமும்' என்றது ப்ரதமாக்ஷரத்தின்மேல் ஏற்றி வாங்கி இருக்கும் நாலாம் வேற்றுமை சேஷத்வமாகிற அர்த்தத்தைச் சொல்லுகிறபடி.

நித்ய நிருபாதிகசேஷத்வமும் (4), இதின் நடுவெழுத்திலே ஸ்ரிய:பதிக்கு நிருபாதிகசேஷபூதனான ஜீவன் மற்றொருவருக்குரியனல்லாதமையும் (5), மூன்றாமெழுத்திலே ஜீவனுடைய தேஹேந்த்ரியாதிகளில் வேறுபாடும் (6), அறிவானமையும் (7), அறிவுடையனானமையும் (8),

---

யினால் அகார வாச்யனான பகவானுக்கு ஜீவாத்மா சேஷபூதனென்றும் அதைத் திருப்பிச் சொல்லும்பொழுது மகாரத்தின் அர்த்தமாகிய ஜீவாத்மாவிற்கு பகவான் சேஷி என்றேற்படுகிறபடியினாலும், இதில் ஒருவிதக்காரணம் சொல்லாமையினாலும், ஒருகால விசேஷம் குறிக்கப்படாமையினாலும் எல்லாக்காலத்திலும் ஒருகாரணமின்றி சேஷி என்று ந்யாயத்தினாலேற்பட்ட அர்த்தத்தை அருளிச்செய்தபடி. 'ஜீவனுடைய நித்ய நிருபாதிகசேஷத்வமும்' என்றது அந்த அகாரத்தின் மேல் எதிரிலோபித்துக்கிடக்கிற நான்காம் வேற்றுமையின் அர்த்தத்தையும், கீழ்ச்சொல்லியபடி ஹேது நிர்தேசாதிகளில்லாதபடியினால் ந்யாயஸித்தமான அர்த்தத்தையும் அருளிச்செய்தபடி. 'இதின் நடுவெழுத்திலே' என்பதற்கு இந்த ப்ரணவத்தின் மத்யமாக்ஷரமாகிற உகாரத்திலே என்றர்த்தம். 'ஸ்ரிய:பதிக்கு நிருபாதிகசேஷபூதனான ஜீவன் மற்றொருவர்க்குரியனல்லாதமையும்' என்றது உகாரம் அவதாரணார்த்தத்தைக்காட்டுகிறது, அந்த அவதாரணத்திற்கும் அயோகவ்யவச்சேதமர்த்தம் என்கிற தாத்பர்யத்தினால் அருளிச்செய்தபடி. 'மற்றொருவருக்குரியனல்லாதமையும்' என்பதற்கு வேறொருவருக்கும் சேஷபூதனாக இல்லாமையும் என்றர்த்தம். 'மூன்றாமெழுத்திலே' என்பதற்கு ப்ரணவத்தின் மூன்றாமெழுத்தான மகாரத்திலே என்றர்த்தம். 'ஜீவனுடைய தேஹேந்த்ரியாதிகளில் வேறுபாடும்' என்றது இருபத்தைந்தாவது எழுத்தாகிய மகாரம் ப்ரக்ருதி தத்வங்களாகிற இருபத்தி நாலிலும் வேறுபட்ட இருபத்தைந்தாவது தத்வமாகிற ஜீவனைச்சொல்லுகிறதென்கிற அக்ஷரநிருக்தியை அபிப்ராயத்தில் கொண்டருளிச்செய்தபடி. 'அறிவானமையும்' என்றது 'மந ஜ்ஞாநே' என்கிற தாதுவினால் நிஷ்பந்நமான பதமாய், அதினாலேற்பட்ட அர்த்தத்தை யருளிச்செய்தபடி. 'அறிவுடையனானமையும்' என்றது 'மந அவபோதநே' என்கிற

இரண்டாகாரத்திலும் ஆநந்தஸ்வரூபனா யிருக்கும்படியும் (9), ஸ்வயம் ப்ரகாசனாயிருக்கும்படியும் (10), தனக்குத் தான் தோற்றும்படியும் (11), அணுவானமையும் (12), 'நம:' என்கிற யிரண்டாம் பதத்திலே ஜீவன் கர்மாதீநனாக விரோதிகையிலே யகப்பட்டு நின்றமையும் (13), தானேன்

தாதுவினால் நிஷ்பந்நமான பதமாய், அதினாலேற்பட்ட அர்த்தத்தை அருளிச்செய்தபடி. 'இரண்டாகாரத்திலும் ஆநந்தஸ்வரூபனாயிருக்கும்படியும்' என்றது தன்னுடைய ஸ்வரூபமும் தன்னுடைய தர்மபூத ஜ்ஞானமும் ஒருவருக்கும் ப்ரதிகூலமாகத் தோன்றுகிறதில்லையாகையினாலே அநுகூலமாகவே தோன்றுகிறபடியினால் இவை இரண்டும் அநுகூலஸ்வரூபமானவையென்பதைத் திருவுள்ளம் பற்றியருளிச்செய்தபடி. 'ஸ்வயம்ப்ரகாசனாயிருக்கும்படியும்' என்றது 'இரண்டாகாரத்திலும்' என்பதை இங்கும் அந்வயித்துக்கொண்டு ஜ்ஞானம் என்றும், ஜ்ஞானத்திற்காச்ரயமென்றும், ப்ரமாணங்களில் சொல்லப்பட்டிருப்பதினால் ஸ்வயம் ப்ரகாசத்வமும் ஸித்தமென்று ந்யாயஸித்தமான அர்த்தத்தை யருளிச்செய்தபடி. 'தனக்குத்தான் தோற்றும்படியும்' என்றது 'மந அவபோதநே' என்கிற தாதுவினால் நிஷ்பந்நமானபதமாய், அதினாலேற்பட்ட அர்த்தத்திற்கு ஸங்கோசத்திற்குக் காரணமில்லாமையினால் தன்னையுமறிக்கு கொள்ளுதல் ஏற்படுகிறது என்னும் திருவுள்ளத்தினால் அருளிச்செய்தபடி. அன்றிக்கே 'அஹம்' சப்தத்தில் 'அஹ', 'அஸ்' என்கிற பாகங்களே ப்ரக்ருதி அம்சம் நிற்கிறதாய் அதற்கு நான் என்று அர்த்தமாய், நான் என்னும்பொழுது தனக்குத் தான் தோன்றுகையாகிற ப்ரத்யக்த்வமும் ஸித்தமாகிறதென்கிற திருவுள்ளத்தினால் அருளிச்செய்தபடியாகவுமாம். 'அணுவானமையும்' என்றது 'அண சப்தே' என்கிற தாதுவினால் நிஷ்பந்நமான பதமாய் அதினால் பரிமாணத்தை யுடையவன் என்று பொதுவாக ஏற்பட்டபோதிலும் ப்ரமாணாந்தரங்களில் அணுபரிமாணத்தை யுடையவனென்று சொல்லி இருப்பதைச்சேர்த்து யருளிச்செய்தபடி. இப்படி ப்ரணவத்தில் பனிரெண்டு அர்த்தங்கள் அருளிச்செய்யப்பட்டன. 'ஜீவன் கர்மாதீநனாக விரோதி கையிலே யகப்பட்டு நின்றமையும்' என்றது 'நம:' என்பதோடு 'ஷஷ்ட்யந்தஸ்யாக:'

றையும் பற்ற *நிருபாதிகஶேஷியல்லாமையும்* (14), ஒரு *கார்யத்திலும் நிரபேக்ஷகர்த்ருத்வமில்லாமையும்* (15), *ஸ்வதந்த்ர ஸ்வாமியாலே ஸாமவதஶேஷமாக விநியோக்தனான* படியும் (16), *ஸ்வரக்ஷோபாயத்வமும்* (17), *உபாயவிஶேஷ*

என்கிற பதங்களைச்சேர்த்துக் கொண்டு எனக்கு ஒருவித விரோதிகளும் இருக்கக்கூடாது என்று அநிஷ்ட நிவ்ருத்தி ப்ரார்த்தனையைச்சொல்லுகிற யோஜனையில் இதற்குமுன் அப்படிப்பட்ட விரோதிகள் இருந்தன என்றேற்படுகிற அர்த்தத்தை அருளிச்செய்தபடி. 'தானொன்றையும்பற்ற நிருபாதிகஶேஷியல்லாமையும்' என்றது 'நம:' என்பதோடு 'ஶேஷித்வம்' என்கிற பதத்தைச் சேர்த்துக்கொண்டு சொல்லுகிற யோஜனையில் ஏற்பட்ட அர்த்தத்தையருளிச்செய்தபடி. தனக்கு ஶரீரம், இந்திரியங்கள், க்ருஹம், முதலியவைகளைப்பற்ற ஶேஷித்வம் இருந்தபோதிலும் அது ஜந்மாந்தரங்களில் செய்த கர்மமடியாக வந்தவைகளாகையினால் நிருபாதிகமல்ல. ஆகையினால் 'நிருபாதிகஶேஷித்வம்' இல்லையென்பதோடு விரோதிக்காதென்று தாத்பர்யம். 'ஒருகார்யத்திலும் நிரபேக்ஷகர்த்ருத்வமில்லாமையும்' என்றது 'நம:' என்பதோடு 'ஸ்வாதந்த்ர்யம்' என்கிற பதத்தைச்சேர்த்துக்கொண்டு தனக்கு ஒன்றிலும் ஸ்வாதந்த்ர்யமில்லை என்றர்த்தம் சொல்லுகிற யோஜனையில் ஏற்பட்ட அர்த்தத்தையருளிச்செய்தபடி. 'ஸ்வதந்த்ர ஸ்வாமியாலே ஸாமவதஶேஷமாக விநியோக்தனான படியும்' என்றது தன்னைப்பற்ற தனக்கு ஸ்வாதந்த்ர்யமில்லையென்றால் ஸ்வதந்த்ரனான ஸ்வாமி இட்டவழக்காக வேண்டியது என்கிற ந்யாயத்தினாலேற்பட்ட அர்த்தத்தையருளிச்செய்தபடி. 'ஸ்வரக்ஷோபாயத்வமும்' என்றது தனக்கு ஸ்வாதந்த்ர்யமில்லாமையினாலே தன்னை ரக்ஷித்துக்கொள்ளத் தான் அஶக்தனாய் ஸ்வதந்த்ரனான ஸ்வாமியைத் தவிர வேறொரு ரக்ஷகர்களில்லையென்பது ஏற்பட்டது என்கிற திருவுள்ளத்தினாலருளிச்செய்தபடி. அன்றிக்கே 'நம:' என்பதோடு 'ஸ்வ:' என்கிற பதத்தைச்சேர்த்துக்கொண்டு சொல்லுகிற யோஜனையில் தன்னை ரக்ஷித்துக்கொள்ளவேண்டிய பரம் தனக்கில்லாமை ஏற்படுகிறபடியினால் அதை அருளிச்செய்தபடியாகவுமாம். அதுவுமன்றிக்கே 'நம:' என்பதற்குப் பரயோஜனையைத் திருவுள்ளம்

பரிக்ரஹமும் (18), நலந்தருஞ் சொல்லான நாராயண ஶப்தத்தில் அவித்தினுடைய ஸ்வரூபான்யதாபாவமும் (19), ஜீவர்களுக்கு ஸ்வரூபான்யதாபாவமில்லாமையும் (20), ஜந்துக்களுடைய ஸ்ருஷ்டிஸம்ஹார விஷயத்வமும் (21), சேதநஸமூஹத்தினுடைய ஆநந்த்யமும் (22), ஸர்வநியந்தாவினுடைய ஸ்வரூபஸ்வபாவ நிர்விகாரமும் (23),

---

பற்றியருளிச் செய்தபடியாகவுமாம். 'உபாயவிசேஷபரிக்ரஹமும்' என்றது நமஶ்ஶப்தமே அங்கங்களோடுகூடின பரந்யாஸத்தைச் சொல்லுகிறதென்கிற யோஜனையைத் திருவுள்ளம் பற்றி யருளிச்செய்தபடி. இப்படி நமஸ்ஸில் ஆறர்த்தங்கள் அருளிச்செய்யப்பட்டதாகிறது. 'நலந்தருஞ் சொல்' என்பதற்குப் பக்தியைக்கொடுக்கக்கூடிய பதம் என்றர்த்தம். 'அவித்தினுடைய ஸ்வரூபான்யதாபாவமும்' என்றது நரஶப்தத்தை நஞ்ஸமாஸமாய் அதிலிருக்கும் 'ர:' என்பது 'ரிஷ் க்ஷயே' என்கிற தாதுவினால் நிஷ்பந்நமாய், அது ஸ்வரூபமே மாறக்கூடிய அசேதனத்தைச் சொல்லுகிறது என்கிற திருவுள்ளத்தினால் அருளிச்செய்தபடி. 'ஜீவர்களுக்கு ஸ்வரூபான்யதாபாவமில்லாமையும்' என்றது 'நரா:' என்கிற பதத்தில் அப்படிப்பட்ட ஸ்வரூபமாறுதலில்லாதவர்கள் என்கிற அர்த்தத்தைத் திருவுள்ளம் பற்றி அருளிச்செய்தபடி. 'ஜந்துக்களுடைய ஸ்ருஷ்டிஸம்ஹாரவிஷயத்வமும்' என்றது நரனென்கிற பகவானிடத்திலிருந்து உண்டான தத்வங்கள் நாரங்களென்னப்படுகின்றன என்கிற யோஜனையைத் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்தபடி. அதில் ஜீவர்கள் நித்யர்கள் என்பது ப்ரமாணஸித்தமாயிருந்த போதிலும் அசேதனமாகிற ஶரீரத்தோடு சேருவதும் பிரிவதுமாகிற காரணத்தினால் ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களை யடைவது உண்டாகிறபடியினால் விரோதமில்லை என்று தாத்பர்யம். 'சேதநஸமூஹத்தினுடைய ஆநந்த்யமும்' என்றது 'நர' என்கிற பதத்தினால் சொல்லப்படுகிற ஜீவாத்மாவின் கும்பல்கள் நாரங்கள் என்னப்படுகின்றன என்கிற யோஜனையைத் திருவுள்ளம் பற்றியருளிச்செய்தபடி. 'ஸர்வநியந்தாவினுடைய ஸ்வரூபஸ்வபாவ நிர்விகாரமும்' என்றது 'ரிஷ் க்ஷயே' என்கிற தாதுவினால் நிஷ்பந்நமான 'ர:' என்கிற பதத்தை

நேத்ருத்வமும் (24), ஸர்வ வ்யாபகத்வமும் (25), ஸர்வாதாரத்வமும் (26), ஸர்வ வித பந்துத்வமும் (27), ஸர்வவித புருஷார்த்த ப்ரதாயகத்வமும் (28), ஸ்வத: ப்ராப்யத்வமும் (29), இந்நாராயண சப்தத்தில், ஸந்நிதியிலே ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலா வடி

நஞ்ஸமாஸமாக விக்ரஹித்து நரசப்தமே பகவானைச்சொல்லுகிறது என்கிற யோஜனையில் 'நர:' என்னும் பதமே ஸ்வரூபம், ஸ்வபாவம், இவைகளில் மாறுதலை அடைகிற சேதநாசேதன வஸ்துக்களைச்சொல்லி அப்படிப்பட்ட இரண்டுவிதமான மாறுதல்களு மில்லாதவன் நரன் என்கிற யோஜனையைத் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்தபடி. 'நேத்ருத்வமும்' என்றது 'நயதீதி நர:' என்கிற வ்யுத்பத்தியினால் எல்லா வஸ்துக்களையும் அந்தந்தக் கார்யங்களில் நடத்துகிறான் என்றர்த்தமாகையினால் அதைத் திருவுள்ளம் பற்றியருளிச்செய்தபடி. 'ஸர்வவ்யாபகத்வமும்' என்றது நாரங்களை அயனமாகவுடையவன் என்கிற யோஜனையில் நாரங்களைத் தன்னால் வ்யாபிக்கத்தகுந்த வஸ்துக்களாக உடையவன் என்றர்த்தமாகையினால் அதிலேற்பட்ட அர்த்தத்தை யருளிச்செய்தபடி 'ஸர்வாதாரத்வமும்' என்றது நாரங்களுக்கு அயனம் என்கிற தத்புருஷ ஸமாஸத்திலேற்பட்ட அர்த்தத்தை யருளிச்செய்தபடி. 'ஸர்வவிதபந்துத்வமும்' என்றது ச்ருதியில் ஸர்வவித பந்துவும் நாராயணன் என்றோதப்பட்ட அர்த்தத்தை யருளிச்செய்தபடி. 'ஸர்வவித புருஷார்த்த ப்ரதாயகத்வமும்' என்பது 'அயநம்' என்னும் பதத்திற்கு 'ப்ராப்யதே அநேந' என்கிற கரண வ்யுத்பத்தியாய் அப்பொழுது 'நாராணாம் அயநம்' என்கிற தத்புருஷ ஸமாஸத்தினாலேற்பட்ட அர்த்தத்தை அருளிச்செய்தபடி. 'ஸ்வத: ப்ராப்யத்வமும்' என்றது 'ப்ராப்யத இதி அயநம்' என்கிற வ்யுத்பத்தியில் ஏற்பட்ட அர்த்தத்தை யருளிச்செய்தபடி. 'இந்நாராயண சப்தத்தில் ஸந்நிதியிலே ஒழிவில் காலமெல்லா முடனாய்மன்னி வழுவிலாவடிமை செய்யவேண்டும்படியும்' என்றது இவ்விருக்கும் சதுர்த்தி யர்த்தத்தைச் சொல்லுவதாயிருந்தால் ப்ரணவத்தில் அது சொல்லப்பட்டபடியினாலே நிஷ்ப்ரயோஜனமாகு மாகையினால்

மை செய்யவேண்டும்படியும் (30), [illegible] செய்யம். இப்படித் திருமந்த்ரத்தில் ஸர்வ வேதங்களுக்கும் விதையான முதல் பதத்திலே முளைத்து இரண்டாம் பதத்திலே வளர்ந்து மூன்றாம் பதத்திலே ஸாபல்யமான ஸ

அதின் கார்யமான கைங்கர்யத்தைச் சொல்லுகிறது என்கிற திருவுள்ளத்தினாலருளிச்செய்தபடி. ‘ஒழிவில் காலமெல்லாம்’ இத்யாதி மேலே வ்யாக்யாதம். ‘அடிமைசெய்யவேண்டும்படி’ யாவது அவனுடைய உகப்பே ப்ரயோஜனமாகத் தனக்கு அதில் போக்த்ருத்வாதி அபிஸந்தியில்லாமல் செய்யும் ப்ரகாரம். இப்படி சதுர்த்யந்தமான நாராயண பதத்தில் பனிரெண்டர்த்தங்கள் அருளிச்செய்யப்பட்டதாகின்றன. ‘[illegible] செய்யம்’ என்பதற்கு மேருளிச்செய்தவைகள் ப்ரதானமாக வேற்பட்டபோதிலும் இவைகளினால் ஆக்ஷிப்தங்களான ஸர்வஜ்ஞத்வ ஸர்வசக்தித்வாதிகளும் அனுஸந்தேயங்கள் என்று தாத்பர்யம். ஆகஇப்படி திருமந்திரத்தில் முப்பது அர்த்தங்கள் அருளிச்செய்யப்பட்டதாகிறது. இப்படித் திருமந்திரத்தின் ஸாரார்த்தங்களை அருளிச்செய்து மேல் த்வயார்த்தத்தை யருளிச்செய்யப்போகிறவராய் உக்தார்த்தங்களின் அனுஸந்தானத்தின் ப்ரயோஜனத்தை அனுவதிக்கிறார்—‘இப்படி’ என்றாரம்பித்து. ‘ஸர்வ வேதங்களுக்கும் விதையான முதல் பதத்திலே’ என்பதற்கு ஸர்வ வேதங்களுக்கும் மூலமான (காரணமான) ப்ரணவத்தில் என்றர்த்தம். ப்ரணவத்திலிருக்கும் அகார உகார மகாரங்களிலிருந்து மூன்று வேதங்களும் உண்டாயிற்று என்பது ஸ்ருதிஸித்தம் என்று திருவுள்ளம். ‘முளைத்து’ என்பதற்கு பிறந்து என்றர்த்தம். அதாவது ஸ்வரூபஜ்ஞானம் உண்டாகி என்று தாத்பர்யம். ‘இரண்டாம் பதத்திலே வளர்ந்து’ என்பதற்கு அந்த ப்ரணவத்தில் உண்டாகிய ஜ்ஞானம் இரண்டாம் பதமாகிய நமஸ்ஸப்தத்தில் அஹங்கார மமகார நிவ்ருத்திகளளவாக ஓடிப்படர்ந்து என்று தாத்பர்யம். ‘[illegible]மானபடியும்’ என்பதற்கு இது கைங்கர்யத்தில் அபேக்ஷயாகிற பலம் வரையில் ஆயிற்று என்று தாத்பர்யம். அதாவது திருமந்திரத்தில் ப்ரணவத்தில் ஸ்வரூப விவேகமுண்டாய், நமஸ்ஸில் அஹங்கார மமகார நிவ்ருத்தியடைந்து ஆகிஞ்சர்

ஸாங்க ஜ்ஞானத்தை யுடையவனுக்கு அசேஷமான ஸாரஸார ஸவர்ணத்தை விசதமாக ப்ரகாசிப்பிக்கிற த்வயத்தில் ப்ரதமாக்ஷரமான ஸ்ரீசப்தத்திலே விவக்ஷிதையாய் வாஞ்சாதிக ஸம்பத்ப்ரதையான வேரிமாறாத பூமேலிருப்பாள்

பாதிகளை யனுஸந்தித்து, சதுர்த்யர்த்தமான நாராயண பதத்தில் அப்படிப்பட்ட ஸ்வரூபாநுகூலமான புருஷார்த்தத்தை யபேக்ஷிக்கிறான் என்று திருவுள்ளம். 'ஸஸாங்க ஜ்ஞாந'மாவது பாசுரங்களைப்பற்றி அவைகள் வெவ்வேறு ஏற்கிற ஜ்ஞானம். 'ஸ்ரீசப்தத்திலே விவக்ஷிதையாய் வாஞ்சாதிகஸம்பத்ப்ரதையான வேரி மாறாத பூமேலிருப்பாள் வினைதீர்க்கும் ப்ரகாரங்களும்' என்றது 'ச்ருணாதி ஸம்ஸாரம்' என்கிற தாதுவினுல் நிஷ்பந்நமான பதமாகையினாலே பாப நிவர்த்தகத்வம் சொல்லப்படுகிற படியினாலும், 'ச்ருணோதி, ச்ராவயதி' இத்யாதி வ்யுத்பத்திகளையும் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்தபடி. 'வாஞ்சாதிக'மாவது பலத்தைக் கொடுக்கிற ஒருவன் தன்னால் அடையக்கூடியவனுகைக்குக் காரணமாக ப்ரார்த்திக்கப்படும் மற்றொருவன். இவ்விடத்தில் பிராட்டி புருஷகாரமாக இருந்து உபாயவிரோதி பாபங்களையும், உபாயமாகி ப்ராப்தி விரோதி பாபங்களையும் நிவ்ருத்திக்கிறாள் என்கிற திருவுள்ளத்தினால் 'வாஞ்சாதிகஸம்பத்ப்ரதை' என்றும், 'வினை தீர்க்கும் ப்ரகாரங்களும்' என்றுமருளிச் செய்யப்பட்டிருக்கிறது. இப்படிப் பிராட்டி ப்ராப்தி விரோதி பாபங்களையும் போக்கடிக்கிறாள் என்பதற்கு ஆழ்வார் ஸ்ரீஸூக்தியை ஸ்வவாக்யச் சாயையாக உதாஹரித்தருளுகிறார்—'வேரி மாறாத' என்றாரம்பித்து. வேரி - பரிமளம், மாறாத - ஒரு பொழுதும் மாறுதலான, பூ மேல் - புஷ்பத்தின் மேல், இருப்பாள் - வஸிக்கிறவளான பெரியபிராட்டியார், வினை - ஸர்வபாபங்களையும், தீர்க்கும் - நசிப்பிக்கும். 'வினை தீர்க்கும்' என்றதினுல் ப்ராப்தி விரோதி பாபங்களைத் தீர்க்கும் என்பதர்த்தமாகுமோ? புருஷகாரமாக இருந்து உபாய விரோதி பாபங்களை மாத்திரம் போக்குகிறாளென்றர்த்தமாகாதோ வென்னில்? இத்திருவாய்மொழியின் வ்யாக்யாதாக்களின் அபிப்ராயங்களைப் பராமர்சிப்போம். ஆறாயிரப்படியில் 'இத்திருவாய்

மொழி வல்லாருடைய ஸம்ஸாரது:கங்களையும் ஸமஸ்தாஶ்ரிதவா த்ஸல்யாதி கல்யாணகுணைகதாரிணியான பெரியபிராட்டியார் 'போக்குமென்கிறார்' என்று வ்யாக்யாதமாயிற்று. அழகிய மணவாள ஜீயருரையில் 'ஸமஸ்த விரோதியான ஸம்ஸார து:கங்களையும் தன் கடாக்ஷத்தாலே போக்கும்' என்று வ்யாக்யானம் செய்யப்பட்டிருக்கிறது. ஈட்டில் (முப்பத்தாறாயிரப்படியில்) 'இத்திருவாய்மொழி கற்றார்க்குப் பலங் கொடுப்பாள் பெரிய பிராட்டியார் என்கிறது' என்றாரம்பித்து, 'ஸர்வேஶ்வரன் பலம் கொடுக்கிற தசையிலே அவனை விலக்கி தானே இதுக்கு பலங்கொடுக்கவேணுமென்று தனக்குப் பாரமாக ஏறிட்டுக் கொண்டு பலங் கொடுக்கும். வினை தீர்க்குமே—இத்திருவாய்மொழி கற்றாருடைய ஸமஸ்த கர்ம விரோதியான ஸகல து:கங்களையும் போக்கும். இத்திருவாய்மொழி கற்றார்க்கு அந்தப்புரத்திலேபடியும் நடையுமென்கை' என்று வ்யாக்யாதமாயிற்று. ஶ்ரீயப்பதத்தில் 'படியும் நடையும் - அனுபவமும் கைங்கர்யமும்' என்று வ்யாக்யாதமாயிற்று. இருபத்தினாலாயிரப்படியில் 'இத்திருவாய்மொழி கற்றாரைத் தனக்கே பரமாக்கிக் கொண்டு இவர்களுடைய ஸமஸ்த விரோதி ஸம்ஸார து:கங்களையும் தீர்க்குமென்கிறபடி' என்றும், ஒன்பதினாயிரப்படியில் 'ஹரிவக்ஷ விராம ஸ்திதி வக்ஷஸ்ஸ நிவாஸா லக்ஷ்மீ: ஸா ஸகல ஸமஸ்த விரோதி பாப நாஶ பத்ரக்ஷ:' என்றும், பதினொன்றாயிரப்படியில் 'ஹரிக்கும் ஸம்பந்தமும் மாறாத வக்ஷஸ்ஸிலே நித்யவாஸம் பண்ணுகிற லக்ஷ்மீ கடாக்ஷத்தாலே ஸமஸ்த விரோதி பாபங்களையும் போக்கும்' என்றும் வ்யாக்யானம் பண்ணப்பட்டது. ஆகையினால் இந்த வாக்யத்திற்கு லக்ஷ்மீ முதலில் புருஷகாரமாயிருந்து உபாயவிரோதி பாபங்களைப் போக்கி, பகவானை அபிமுகனாக்கும் ப்ரகாரங்களும், பிறகு உபாயதசையிலும் தானும் உபாயமாக இருந்து 'ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி' என்று ஸங்கல்பிக்கும் ப்ரகாரங்களும் என்றே தாத்பர்யங் கொள்ளவேண்டும். இப்படிக் கொள்ளாத

வினைதீர்க்கும் ஆகாரங்களும் (31), அதின் உத்தரார்த்தத்திலே அலர்மேல்மங்கை சரணம் சரணனனவன் மார்பிலே அகலகில்லே னிறையு மென்றுறையும்படியும் (32), நாராயண சப்தத்தில் 1 'நிகரில் புகழாய்' இத்யாதிகளி லருளிச்

பக்ஷத்தில் 'வேறி மாறுத' என்றெடுத்திருப்பது விரோதிக்கும் என்று தாத்பர்யம். அதின் உத்தரார்த்தத்திலே அலர்மேல் மங்கை சரணம் சரணனனவன் மார்பிலே அகலகில்லே னிறையு மென்றுறையும்படியும்' என்றது 'ஸ்ரீதரவ:' நித்யயோகத்தைச் சொல்லுகிறது என்கிற திருவுள்ளத்தினால் அருளிச்செய்தபடி. 'சரணம் சரணனனவன் மார்பிலே' என்பதினால் வேறொரு கதியில்லாமல் வந்து ஆச்ரயிக்கிற சேதனர்களைப் பகவானும் ஏதாவது அபராதத்தைக் கண்டு ரக்ஷிக்க நெகிழ்ந்தானாகில் அவனுக்கு ரக்ஷகர் வேறொருவருமில்லாமையினால் அவன் நித்ய ஸம்ஸாரியாய் விடுவனே என்கிற காருண்யத்தினால் அவன் மார்பைவிட்டுப் பிரியாமலிருக்கிறாள் என்று லக்ஷ்மீ நித்யவாஸம் செய்வதற்கு ப்ரயோஜனம் ஸூசிப்பிக்கப்பட்டது. 'அகலகில்லேனிறையும்' என்பது கீழே வ்யாக்யாதம். 'என்றுறையும்படியும்' என்பதற்கு எப்பொழுதும் வஸிக்கும் ப்ரகாரமும் என்றர்த்தம். இத்தால் அபராதிகளும் நினைத்தபோது ஆச்ரயிக்கலாம், புருஷகாரம் எப்பொழுதும் ஸந்நிஹிதமாயிருக்கிறபடியினால், என்பதே தற்பட்டது. 'நாராயண சப்தத்தில் 'நிகரில்புகழாய்' இத்யாதிகளில் அருளிச்செய்த சரண்ய ஸ்வபாவமும்' என்றது நாரசப்தத்தில் 'ஸ்ரவஸ்வைஸ்ரீ நோ நாராः' என்கிற யோஜனையில் அவனுடைய விபூதிகள், விக்ரஹங்கள், ஸகல குணங்கள், மஹிஷீ, பரிஜனங்கள், முதலியவைகள் எல்லாம் விவக்ஷிதமான போதிலும் இந்த பூர்வ கண்டத்தில் உபயோக விசேஷத்தை முன்னிட்டு சரண்யத்வோபயுக்தங்களான குணவிசேஷங்கள் சொல்லப்படுகின்றன என்கிற திருவுள்ளத்தினால் அருளிச்செய்தபடி. இப்படி நாராயணசப்தத்தில் குணங்கள் விவக்ஷிதங்கள் என்று தாமருளிச்செய்த அர்த்தத்திற்கு ப்ரமாணமாக ஆழ்வார் ஸ்ரீஸூக்தியை உதாஹரித்தருளுகிறார்—'நிகரில் புகழாய்' இத்யாதிகளில் என்று.

1 திருவாய்மொழி-6-10-10.

செய்த ஶரண்ய ஸ்வபாவமும் (33), ஶரண ஶப்தத்தில் உபாயோபேய தஶைகளை யூடுருவி நிற்கிற திவ்யமங்கள விக்ரஹயோகமும் (34), 'ஶரணௌ' என்கிற ஶப்தத்திலே நின்சரணல்லால் சரணில்லை யென்று கழல்களவையே ஶரணமாகக் கொள்ளுகிறபடியும் (35), 'ப்ரபத்யே' என்கிற பதத்திலே மத்யமமான பாதத்தில் [illegible]

'உலகுமூன்றுடையாய்' என்று மேலே பரத்வத்தைத் தனித்தருளிச் செய்திருப்பதினால் 'நிகரில் புகழாய்' என்பது ஶரண்யத்வோபயுக்தங்களான ஸௌலப்யாதி குணங்களைச் சொல்லுகிறது என்று திருவுள்ளம். நிகர் - ஸத்ருஶம், இல் - இல்லாத, புகழாய் - கல்யாணகுணங்களையுடையவனே. 'சரண ஶப்தத்தில் உபாயோபேய தஶைகளை யூடுருவி நிற்கிற திவ்யமங்கள விக்ரஹ யோகமும்' என்றது சரணஶப்தம் ஆஶ்ரயண ஸௌகர்யாதிகளுக்காகவும், க்ருபோத்தம்பநாதிகளுக்காகவும் தாஸபூதன் இழியும் துறையான திருவடிகளைச் சொல்லி, அத்துடன் சேர்ந்த திவ்யமங்கள விக்ரஹத்தைக் குறிக்கிறது என்கிற திருவுள்ளத்தினாலருளிச் செய்தபடி. 'ஊடுருவி நிற்கிற' என்பதற்கு உள் புகுந்து இரண்டிலும் வ்யாபித்திருக்கிற என்றர்த்தம். அதாவது உபாயதஶையிலும் உபேயதஶையிலும் வ்யாபித்து நிற்கிறது என்று தாத்பர்யம். இவ்விடத்தில் 'உபாயபேக்ஷ காலே' இத்யாதி த்ரமிடோபநிஷத் ஸாரத்தில் அருளிச் செய்திருப்பது அநுஸந்தேயம். 'ஶரணம்' என்கிற ஶப்தத்திலே நின் சரணல்லால் சரணில்லை என்று கழல்களவையே ஶரணமாகக் கொள்ளுகிறபடியும்' என்றது 'ஶரணம்' என்னும் பதம் அநேகார்த்தங்களைச் சொல்லுவதாக இருந்தபோதிலும் இவ்விடத்தில் உபாயம் என்கிற அர்த்தத்தையே சொல்லுகிறது என்கிற அஹிர்புத்ந்யஸம்ஹிதா வசனத்தையும் ப்ரமாணங்களையுமனுஸரித்தும் சரணஶப்தத்தோடு 'ஏவ' காரத்தைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்பதையும் திருவுள்ளம்பற்றியருளிச்செய்தபடி. நின் - உன்னுடைய, சரணல்லால் - திருவடிகளைத்தவிர, சரண் - வேறு உபாயம், இல்லை, என்று - என்றநுஸந்தித்துக்கொண்டு, கழல்களவையே - திருவடிகளையே, ஶரணமாகக்கொள்ளுகிறபடியும் - உபாயமாக அங்கீகரிக்கிறபடியும். 'ப்ரபத்யே' என்கிறபதத்

ஸத்தாலே அத்யவஸாயாதி ஷட்வர்க்கமாக அடிக்கீழமர்ந்து அடைக்கலம் புகுகிறபடியும் (36). ஸ்லோகத்தின் உத்தரத்திலே களைகண் மற்றிலே னென்னும்படி தானும் தமரும் பிறரும் தனக்குத் தஞ்சமன்றிக்கே புகலொன்றில்லா வடியேனென்று நிற்கிற

திலே 'மத்யமஸேநயாதாவில் ப்ரஜ்ஞாநாநுஸாரத்தாலே அத்யவஸாயாதி ஷட்வர்க்கமாக அடிக்கீழமர்ந்து அடைக்கலம் புகுகிறபடியும்' என்றது 'பத³ க³தௌ' என்று தாது பாடமிருக்கிறபடியினால் 'ப்ரபத்யே' என்பது கதியாகிற அர்த்தத்தைச்சொல்லுவதாக இருந்தபோதிலும் 'ஸர்வே கத்யர்த்தா புத்த்யர்த்தா:' என்கிற ந்யாயமிருக்கிறபடியினால் பொதுவாக புத்தி அர்த்தமானபோதிலும் ப்ரமாணங்களைப் பராமர்சிக்கும்பொழுது மஹாவிஸ்வாஸம் முதலிய அங்க விசேஷங்களோடுகூடிய புத்தி விசேஷமே உபாயம் என்று சாஸ்த்ரங்களில் சொல்லியிருப்பதை யநுஸரித்தருளிச்செய்தபடி. 'ப்ரஜ்ஞாநாநுஸாரத்தாலே' என்பதற்குக் கதியைச்சொல்லுகிற தாதுக்கள் புத்தியைச் சொல்லும் என்கிற ப்ரமாணத்தையும், மஹாவிஸ்வாஸம் முதலிய அங்கங்களோடுகூடிய புத்தி விசேஷமே மோக்ஷோபாயம் என்கிற ப்ரமாணங்களையுமநுஸரித்து என்று தாத்பர்யம். 'மத்யமாநயாதா' என்பதற்கு கூடப்பானதைச் சொல்லுகிற தாது என்றர்த்தம். 'அத்யவஸாயம்' என்றது மஹாவிஸ்வாஸத்தை. 'ஆதி' என்னும் பதத்தினால் ஆநுகூல்ய ஸங்கல்பம் முதலிய மற்ற அங்கங்கள் சொல்லப்படுகின்றன. 'அடிக்கீழமர்ந்து' என்பதற்கு எம்பெருமானுடைய திருவடிகளின் கீழ் நித்யமாகச் சேர்ந்திருக்க வேண்டுமென்று எண்ணி, அதாவது அங்கி ப்ரயோஜனமும் என்றர்த்தம். 'அடைக்கலம் புகுகிறபடியும்' என்பதற்கு ஸரணாகதி பண்ணும் ப்ரகாரமும் என்றர்த்தம். 'ஸ்லோகத்தின் உத்தரத்திலே களைகண்மற்றிலே னென்னும்படி தானும் தமரும் பிறரும் தமக்குத்தஞ்சமன்றிக்கே புகலொன்றில்லா வடியே னென்று நிற்கிற நிலையும்' என்றது 'ப்ரபத்யே' என்னும் பதத்தில் இருக்கும் உத்தம புருஷனால் 'நான்' என்பது ஏற்படுகிறபடியினால் அது பொதுவாக இருந்தபோதிலும் 'அநந்யஸரண: ஸரணமஹம் ப்ரபத்யே' இத்யாதி ப்ரமாணங்களை யநுஸரித்தருளிச்செய்தபடி. களைகண் - உபாயம், மற்று - வேறு, இலேன் -

நிலையும் (37), 'ஸ்ரீ ஸதே' என்கிற வசநத்திலே பூவளருந்திருமக ளால் பொன்னுலகி லருள்பெறு மவனுக்கு கோலத்திருமாமக ளென் னென்னை யென்னும்படி நின்ற ஸூரவஸதி வைதிகளுடைய

இல்லாதவன் நான். தமரும் - தன்னைச் சேர்ந்த பந்துக்களும், தஞ்சமன்றிக்கே - ரக்ஷகராகாமல். இப்படி ஆகிஞ்சந்யமே இதில் அர்த்தமாக விவரிக்கவேண்டு மென்பதற்கு ப்ரமாணமாக ஆழ் வார் ஸ்ரீ ஸூக்தியை ஸ்வவாக்யச் சாயையாக அருளிச்செய் கிறார்—'புகல்' என்றாரம்பித்து. புகல் - ஆஸ்ரயிக்கவேண்டிய வஸ்து, ஒன்று - வேறொன்று, இல்லா - இல்லாதவனாகிய, அடி யேன் - தாஸபூதனாகிய நான். 'நிற்கிற நிலையும்' என்பதற்கு இப்படி அகிஞ்சனனாய் அநந்யகதியாய் நிற்கிற நிலையும் என் றர்த்தம். 'ஸ்ரீ ஸதே' என்கிற வசநத்திலே பூவளரும் திருமக ளால் பொன்னுலகிலருள் பெறுமவனுக்கு கோலத்திருமாமகளோ டுன்னை என்னும்படி நின்ற ஸூரவஸதி வைதிகளுடைய பிரி வற்ற சேர்த்தியும்' என்றது பூர்வகண்டத்தில் போலே 'ஸதா ஸீ' நித்யயோகத்தைச் சொன்னபோதிலும் ப்ராப்யபரமான உத்தரகண்டத்தில் ப்ராப்யதசையில் சேர்ந்திருப்பது மாத்தி ரம் விவக்ஷிதம் என்பதை அருளிச்செய்தபடி. அப் படி ப்ராப்யதசையில் சேர்ந்திருப்பதற்கு உபயோக விசே ஷத்தை ஆழ்வார் ஸ்ரீ ஸூக்தியை ஸ்வவாக்யச் சாயையாய் உதாஹரித்துக் கொண்டருளிச் செய்கிறார்—'பூவளரும்' என் றாரம்பித்து. பொன்னுலகில் - ஸ்வர்ணம்போல் ஸ்வயம் ப்ரகாச மான பரமபதத்திலே, பூவளரும் – புஷ்பத்திலே வளியாநிற் கிற, திருமகளால் – பெரிய பிராட்டியாரால், அருள் பெறுமவ னுக்கு – க்ருபையை அடைகிற முக்தனுக்கு, அதாவது 'சேஷி சேஷாசநாதி ஸகலபரிஜந ஸமவாய ... வரி வயப்ராபா ... ' என்று கத்யத்திலருளிச் செய்த படியே பிராட்டியின் நியமனத்தை முன்னிட்டுக் கைங்கர்யங் களை செய்யவேண்டியதாகையினால் அப்படிக் கைங்கர்யம் செய்கிற நித்ய முக்தர்களுக்கு, என்று தாத்பர்யம். இத்தால் கைங்கர்யமாகிற புருஷார்த்தமும் இவளுடைய நியமனத்தை முன்னிட்டே செய்யவேண்டுமாகையினால் அப்படி முக்தனைக்

பிரிவற்ற சேர்த்தியும் (38), 'நாராயணாய' என்கிற பதத்திலே வழுவிலா வடிமைக்கு வகுத்த ஶேஷியினுடைய நிரதிஶயபோக்யத்வமும் (39), சதுர்த்தியிலே ஸர்வ விரோதி நிவ்ருத்திபூர்வமாயில் வரும் கைங்கர்யங்களைப் பற்றியிருக்

கைங்கர்யத்தில் ஸம்யோஜிதமாக நியமிக்கிறாள் என்பது ஸூசிப்பிக்கப்பட்டது. ப்ராப்யதசையில் மிதுனம் உத்தேஶ்யமென்பதற்கு ஆழ்வார் ஸ்ரீஸூக்தியை ப்ரமாணமாக உதாஹரித்தருளுகிறார்—'கோலத் திருமாமகள்' என்றாரம்பித்து. கோல - உனக்கும் அலங்கார பூதையான, திருமாமகளோடு - திரு என்று சொல்லப்படுகிற பெருமை பொருந்திய பெரிய பிராட்டியாரோடு, உன்னை (கூடாதே)-வந்து சேராமல், 'சாலப்பலநாள் அடியேன் இன்னும் தளர்வேனோ' என்று மேலிருப்பதோடு அந்வயித்துக் கொள்ளவேண்டும். உன்னை ஆஶ்ரயித்தவனான நான் துக்கத்தையடைவேனோ என்று தாத்பர்யம். 'பிரிவற்ற சேர்த்தியும்' என்பதற்கு 'ஶாஶ்வதீ' இத்யாதிகளிற்படியே ஸ்வரூபம், ரூபம், அவதாரம், விபூதிகள் முதலியவைகளில் சேர்ந்திருக்கையும் என்று தாத்பர்யம். 'நாராயணாய' என்கிற பதத்திலே வழுவிலா வடிமைக்கு வகுத்த ஶேஷியினுடைய நிரதிஶய போக்யத்வமும்' என்றது பூர்வகண்டத்தில் உபாயத்வோப யுக்தங்களான ஸௌலப்யாதி குணவர்க்கங்கள் உபயோக விஶேஷத்தாலே விவக்ஷிதங்களானாற்போல உத்தரகண்டத்திலிருக்கும் நாராயண ஶப்தத்திலும் உபயோக விஶேஷத்தாலே ப்ராப்யத்வோபயுக்தங்களான பரத்வத்தைச் சேர்ந்த குணவர்க்கங்கள் விவக்ஷிதங்களாகலாம். அப்படிக்கு இருந்தபோதிலும் கைங்கர்யம் அநுபவத்தினாலுண்டாகும் ஆநந்த பரீவாஹமாய்க் கொண்டு வரவேண்டியதாகையினால் அப்படிப்பட்ட நிரதிஶய ஆநந்தத்திற்குக் காரணமான நிரதிஶய போக்யத்வம் ஏற்படுவதற்காகக் குணங்கள், விக்ரஹங்கள், விபூதிகள், முதலிய ஸர்வப்ரகாரங்களும் விவக்ஷிதங்கள். ஆகையினால் நிரதிஶயபோக்யத்வம் ஏற்படுகிறது என்கிற திருவுள்ளத்தினால் அருளிச் செய்தபடி. 'சதுர்த்தியிலே ஸர்வ விரோதி நிவ்ருத்திபூர்வமாயில்வரும் கைங்கர்யங்களைப்பற்றி இருக்கும்படியும்' என்பதற்குச் சதுர்த்தியில் கைங்கர்யங்களை ப்ரார்த்தித்ததினாலேயே அதற்கு விரோதி

[illegible] யுமி (40), ஸாத்யமாக வசனவலயம். ஐஜம் [illegible]ளிரண்டிலும் தோற்றுகிற வசனஷ்டாநத்திற்கு வியா [illegible] ப்ரமேயாகத்தில் 'ஸர்வபாபேப்ய' என்கிற வசநத்

[illegible]லாம் நிவ்ருத்தி யடையவேண்டு மென்கிற ப்ரார்த்தனை யும் ஏற்பட்டு விட்டபடியினால் அதை இங்கு மறுபடியும் ப்ரார்த்திப்பது ப்ரயோஜனமற்றதாகையினாலே அப்படி விரோதிகளெல்லாம் நிவ்ருத்தி யடைந்த பிறகு வரும் கைங்கர்யத்தில் பாரதந்த்ராநுபவ விஷயத்தினாலே இப்பொழுதுண்டாகிற ஸ்வாதீன கர்த்ருத்வ போக்த்ருத்வ ப்ரமங்கள் இல்லை என்கிற திருவுள்ளத்தினா லருளிச்செய்தபடி. அப்படி ப்ரம முண்டாவதற்குக் காரணம் அஹங்கார மமகாரங்களாகையினால் அவைகளெல்லாம் கழிந்தபிறகு ஸ்வாதீன கர்த்ருத்வ போக்த்ருத்வ ப்ரமங்கள் உண்டாவதற்குக் காரணமில்லை யென்பது 'ஸர்வவிரோதி நிவ்ருத்தி க்ரமயில் வரும்' என்பதினால் ஸூசிப்பிக்கப்பட்டது. 'இருக்கும் படியும்' என்பதற்கு அப்படி இருக்கும் ப்ரகாரமும், அதாவது போக்த்ருத்வ கர்த்ருத்வ ப்ரமங்களில்லாதபடி என்றர்த்தம். இப்படி த்வயத்தில் பதார்த்தங்கள் அருளிச் செய்யப்பட்டதாகிறது. இப்படி த்வயத்தில் ஸாரார்த்தத்தை யருளிச் செய்து மேல் சரமச்லோகத்தில் ஸாரார்த்தத்தை யருளிச் செய்கிறார்—'இப்படி' என்றாரம்பித்து. 'ஐஜங்க ளிரண்டிலும் தோற்றுகிற வசனஷ்டாநத்திற்கு' என்பதற்கு த்வயம் சரணமந்த்ரமாகையினால் ப்ரபத்தியைச் சொல்லுகிறது. திருமந்த்ரம் ஸ்வரூபத்தை உள்ளபடியே அறிவிக்கிறபடியினால் அந்த ஸ்வரூபோசித புருஷார்த்தமும், அத்யந்த பாரதந்த்ர்ய சேஷத்வங்களையுடைய ஸ்வரூபத்திற்குசிதமான உபாயமும் அர்த்தாத் ஸித்தமாகிறபடியினால் திருமந்த்ரமும் உபாயத்தைத் தெரிவிக்கிறது என்று தாத்பர்யம். அன்றிக்கே சமஸ்யத்தில் ஸ்தூல யோஜனையில் உபாயம் சொல்லப்படுகிறபடியினால் என்று தாத்பர்யமாகவுமாம். அதுவுமன்றிக்கே திருமந்த்ரமே சரணமந்த்ரமாகலாமென்று திருமந்த்ராதிகாரத்தில் இவர் தம் மூலேயே யருளிச்செய்யப்பட்டபடியினால் அது ப்ரபத்தியைச் சொல்லுகிறது என்று தாத்பர்யமாகவுமாம். 'ஸர்வபாபேப்யோ'

திலே குறிக்கோள் ஞானங்களாலே பண்ணுமருந்தவங்களினுடைய நாநாவிதத்வமும் (41), 'வஸித்வா' என்கிற வடித்திலே போக்கற்றவன் ஸஹாயாந்தரநிரபேக்ஷையான ப்ரபத்தியைப் பண்ணும்போது அநபேக்ஷிதங்களிலும் தனக்கு ஶக்யமில்லாதவற்றிலும் துவக்கற்று வெறுமையே துணையாக

என்கிற வடித்திலே குறிக்கோள் ஞானங்களாலே பண்ணுமருந்தவங்களினுடைய நாநாவிதத்வமும்' என்றது பதவசனத்தையும், ஸவப்ரபத்தையும் திருவுள்ளம்பற்றியருளிச் செய்தபடி. குறிக்கோள் - ஸாவதானமாகச் சொல்லப்பட்ட, ஞானங்களாலே – ஆத்மஸ்வரூபத்தைப்பற்றிய ஜ்ஞானத்தாலே, அதாவது பல ஸங்க கர்த்ருத்வ த்யாகங்களுடன், பண்ணும் - செய்யப்படுகிற, அரும் - அஶக்யங்களான, அதாவது ஒவ்வொருவன் தேபதாவத்தாக அநுஷ்டிக்க முடியாதது என்று தாத்பர்யம். தவங்களினுடைய - தபஸ்ஸு முதலிய கர்மயோகங்களினுடைய, தபஸ்ஸு என்பது தேவார்ச்சனை தீர்த்தயாத்திரை முதலிய கர்மயோகத்தின் உட்பிரிவுகளைக் குறிக்கிறது. 'வஸித்வா' என்கிற வடித்திலே போக்கற்றவன் ஸஹாயாந்தரநிரபேக்ஷையான ப்ரபத்தியைப்பண்ணும்போது அநபேக்ஷிதங்களிலும் தனக்கு ஶக்யமில்லாதவற்றிலும் துவக்கற்று வெறுமையே துணையாக முன்னிடும்படியும்' என்றது அநுவாத பக்ஷத்தையும், விதிபக்ஷத்தையும் சேர்த்தருளிச்செய்தபடி. அதில் 'போக்கற்றவன்' என்கிற வரையில் அநுவாத பக்ஷத்தின் தாத்பர்யம். போக்கற்றவன் – கத்யந்தரமில்லாதவன். இத்தால் இதற்கு முன் கர்மயோகாதிகள் செய்யாமல் இருந்த நிலைதோற்றுகிறபடியினால் அநுவாத பக்ஷம் சொல்லப்பட்டதாகிறது. 'ஸஹாயாந்தரநிரபேக்ஷையான' என்பது ஹேது கர்ப்பவிசேஷணம், ப்ரஹ்மாஸ்திரத்திற்கு ஸமானமாகையினால் ப்ரபத்தி தனக்கு அவசியம் வேண்டியதான ஆநுகூல்ய ஸங்கல்பாதி அங்கபஞ்சகங்களைத்தவிர வேறொன்றையும் பொறுக்காது என்பது ஸூசிப்பிக்கப்பட்டது. 'அநபேக்ஷிதங்களையும்' என்பதற்குத் தனக்கு ஸஹாயமாகவாதல் அங்கங்களாகவாதல் அபேக்ஷிதங்களல்லாத உபாயாந்தரங்களையும் அதின் அங்கங்களையும் என்றபடி. துவக்கற்று - ஸம்பந்தமில்லாமல், அதாவது நேரில் அவைகளைச் செய்யாமல் போனபோதிலும்

முன்னிடும்படியும் (42), 'ஶாடு' என்கிற வடித்திலே மலர் மகள் விரும்பு நமரும் பெறலடிகள் பத்துடை யடியவர்க் கெளியனாய் அருள்புரிந்த சிந்தை யடியார் மேல்வைத்து அடைக்கலங்கொள்ள வொருப்பட்டு நிற்கிற நிலையும் (43), 'வனக' மென்கிற வடித்திலே தாமரையாள் கேள்வனொருவனே பற்றிலார்

சொனுஷ்டானமும், பரம்பரையாக ஸாதனமானவற்றின் அனுஷ்டானமுமாகிற ஸம்பந்தங்களொன்று மில்லாமல் என்றர்த்தம். வெறுமை - ஆகிஞ்சந்யம். துணையாக - ஸஹாயமாக, முன்னிடும்படியும் - முதலில் அனுஸந்தானம் செய்யும் ப்ரகாரமும். 'ஶா०' என்கிற வடித்திலே மலர் மகள் விரும்பு நமரும் பெறலடிகள் பத்துடையடியவர்க்கெளியனாய் அருள்புரிந்த சிந்தையடியார்மேல் வைத்து அடைக்கலங்கொள்ளவொருப்பட்டு நிற்கிறபடியும்' என்றது 'ஶா०' என்கிற இடத்திலும் உபாயதசையில் லக்ஷ்மியின் ஸம்பந்தம் தாத்பர்யம் என்பதும், ஸௌலப்யாதி குணங்களெல்லாம் ஆஶ்ரிதவாத்ஸல்யத்தினால் பார்த்தஸாரதியாக நின்று அவன் சொல்லிற்றுச் செய்துகொண்டு நிற்கிற நிலையைக் காட்டுகிறபடியினால் விவக்ஷிதமாகிற தென்பதும், இவன் எப்பொழுது தன்னையாஶ்ரயிக்கப்போகிறானோ என்கிற எண்ணத்தினால் இவனை விட்டுப்பிரியாமல் இருக்கிற நிலையும் விவக்ஷிதம் என்கிற திருவுள்ளத்தினாலருளிச் செய்தபடி. மலர்மகள் - புஷ்பத்தில் வஸிக்கும் பெரியபிராட்டியார், விரும்பும் - ஆசைப்படுகிற, அதாவது விருப்பத்துடன் சேர்ந்திருக்கிற, அரும்பெறல் - பெறுவதற்கு அஶக்யமான, நம் - நம்முடையவரான, அடிகள் - ஸ்வாமி, பத்துடையடியவர்க்கு - பக்தியை யுடைய தாஸர்களுக்கு, இங்கு பத்தி யென்றது பக்தியோகமல்ல. ஆஶ்ரயிக்க வேண்டுமென்கிற ப்ரீதிரூபமான ஜ்ஞானத்தைச் சொல்லுகிறது, எளியனாய் - ஸுலபமாயடையக் கூடியவனாய், அருள்புரிந்த - க்ருபையோடுசேர்ந்த, சிந்தை - நினைவை, அடியார்மேல் - ஆஶ்ரிதர்களின்மேல், வைத்து - செய்து, இவன் ப்ரீதியுடன் நினைக்க அவன் க்ருபையுடன் நினைக்கிறான் என்று தாத்பர்யம், 'அஹம் ஸ்மராமி'யைச்செய்து என்றபடி. அடைக்கலங்கொள்ள - நம்மை ரக்ஷ்ய வஸ்துவாக அங்கீகரிக்க, ஒருப்பட்டு - ஸமயத்தை எதிர்பார்த்துக்கொண்டு. 'வனகம்' என்கிறவடித்திலே தாமரையாள்

பற்ற நிற்கிறபடியும் (44), 'ஶரணம்' என்கிற வசநத்திலே அஶரண்யஶரண்யன் விபரீதாபிலாஷயற்ற தைவஜாதிகளுக்கு வன்சரணாய்த்தன் சரணிழல் கீழ்வைக்க வகுத்தமை

'கேள்வனொருவனே பற்றிலார்பற்ற நிற்கிறபடியும்' என்றது இவ்விடத்தில் 'ஏக' ஶப்தமிருந்தபோதிலும் அது ஒருவன் யஜமானன் இத்யாதி வைதிக ப்ரயோகங்களையும், 'யஸ்ய வேதஶ்ச வஸும் ராட் ஸ்திதியோஶ்ச ஸம்ருத்தயே இதி தத்ஸம்ருத்யேவ நிவாரணவாரம் வபு:' இத்யாதி ஆசார்ய ஸ்ரீஸூக்திகளையும் அநுஸரித்து ப்ரமாண ப்ரதிபந்நமாயும் உபயோக விஶேஷத்தையுடையதாயுமிருக்கிற பத்நீ ஸம்பந்தத்தை நிவாரணம் செய்யாது என்பதையும், அத்யர்த்தாகிஞ்சனன் விஷயத்தில் காருண்யாதி குணவிஶிஷ்டனான ஈஶ்வரன் வேறொரு கர்த்தவ்யாந்தரங்களைச் சுமத்தாமல், அதாவது தனக்கு ஒத்தாசையாகவாவது தனக்கு ப்ரஸாதஜனகமாகவாவது ப்ரபத்தியைத் தவிர வேறொன்றையும் எதிர்பாராமல் நிற்கிறான் என்பதையும் திருவுள்ளம் பற்றி யருளிச்செய்தபடி. தாமரையாள் கேள்வன் - தாமரஸ புஷ்பத்தில் அவதரித்தவளான பிராட்டிக்குப் பதியான பகவான். இத்தால் ஏக ஶப்தம் ஶ்ரிய: பதியைக்காட்டுகிறது என்பது தெரிவிக்கப்படுகிறது. பற்றிலார் - கத்யந்தர மில்லாதவர்கள், பற்ற ஆஶ்ரயிக்கும்படி 'ஶரணம்' என்கிற வசநத்திலே அஶரண்யஶரண்யன் விபரீதாபிலாஷயற்ற தைவ ஜாதிகளுக்கு வன் ஶரணாய்த்தன் சரணிழல் கீழ்வைக்க வகுத்தமையும்' என்றது ஶரணஶப்தத்திற்கு அநேகார்த்தங்களிருந்தபோதிலும் இவ்விடத்தில் உபாயமென்கிற அர்த்தத்தையே சொல்லுகிறதென்று அபியுக்தர்களால் வ்யாக்யானம் செய்யப்பட்டபடியினால் இனி அதைப்பற்றி எவ்விடத்திலும் கர்த்தவ்யாந்தரம் இல்லை என்பதைத் திருவுள்ளம்பற்றியருளிச் செய்தபடி. விபரீதாபிலாஷயற்ற - ஆஜ்ஞாதிலங்கனாதிகளில் எண்ணமில்லாத, தைவஜாதிகளுக்கு - 'விஷ்ணுபக்திபரோ தேவ:' என்றும், 'தைவீ ஸம்பத் விமோக்ஷாய' என்றும் சொல்லுகிறபடியே பகவதாநுகூல்யத்தில் ப்ரவ்ருத்தர்களாய் அதினால் மோக்ஷ ஸாம்ராஜ்யத்திற்கென்றிட்டுப் பிறந்தவர்களுக்கு, வன்ஶரணாய் - த்ருட

யும் (45), 'வ்ரஜ' என்கிற வசத்திலே நெறியெல்லா மெடுத்துரைத்த நிறைஞானத்தொரு மூர்த்தி தந்த ஞானக்கையாலே நின்னிலங்கு பாதமன்றி மற்றோர் பற்றிலேனென்று நாமவனைப் பற்றலாம்படி தன் பாதமே சரணாகத் தந்தொழிந்தமையும் (46), 'ஸர்வ'என்கிற வசத்திலே வல்லிகாணென்னும்படியானவலவ ஸகி கொழுஞ்சோதி யுயரத்துக் கூட்டரிய திருவடிக்கள் கூட்டி

மான ரக்ஷகனும். தருடமாயிருக்கையாவது ப்ரதிபந்தகாதிகளொன்றுமில்லாமல் ஒருவிதத்தாலும் பலத்திற்கு ஸந்தேஹமில்லாத ரக்ஷகனும், தன்சரண் நிழல் கீழ் - தன்னுடைய திருவடிகளின் நிழலின் கீழே, வைக்க - ஆச்ரிதனை வைக்க, வகுத்தமையும் - யோக்யனுக்கினதும். 'வ்ரஜ' என்கிற வசத்திலே நெறியெல்லா மேடுத்துரைத்த நிறை ஞானத்தொரு மூர்த்திதந்த ஞானக்கையாலே நின்னிலங்கு பாதமன்றி மற்றோர் பற்றிலே னென்று நாமவனைப் பற்றலாம்படி தன் பாதமே சரணாகத் தந்தொழிந்தமையும்' என்றது மற்றக் கர்மயோகாதிகளான வேதாந்தார்த்தஸாரமான எல்லா உபாயங்களையும் உபதேசித்த ஸர்வேச்வரனே சரணாகதியையும் விதிக்கையாலே இது பலஸாதன மென்பதற்கு ஸந்தேஹமில்லை என்பதும், ஸர்வஜ்ஞனவன் தன் திருவடிகளைக்காட்டி ஆஸக்தர்களெல்லாரும்ஆச்ரயிக்கும்படி தானே காட்டித்தந்தமையும் விவக்ஷிதம் என்கிற திருவுள்ளத்தினாலருளிச் செய்தபடி. நெறியெல்லாம்-கர்மயோகம், முதலிய உபாயங்கள் எல்லாவற்றையும், எடுத்து - வேதாந்த ப்ரமாணங்களிலிருந்து ஸாரோத்தாரம் பண்ணி, உரைத்த - உபதேசித்த, நிறைஞானத்து — பூர்ணமான ஜ்ஞானத்தையுடையவனும், வேதாந்த ஸாரார்த்தங்களை யறியும் படியான ஞானத்தை உடையவனை, ஒருமூர்த்தி - அத்விதீயமான ஸ்வாமி, தந்த-கொடுத்த, ஞானக்கையாலே - ஜ்ஞானமாகிற கைகளினால், நின்னிலங்குபாதமன்றி - உன்னுடைய ப்ரகாசித்துக் கொண்டிருக்கிற திருவடிகளைத் தவிர, மற்றோர் - வேறொரு, பற்றிலேன் - ஆச்ரயிக்கக்கூடிய வஸ்து இல்லாதவன் நான், என்று — இப்படி ஆகிஞ்சன்யத்தை முன்னிட்டுக்கொண்டு. 'ஸர்வ' என்கிற வசத்திலே வல்லிகாணென்னும்படியான வலவ ஸகி கொழுஞ்சோதி யுயரத்து கூட்டரிய திருவடிக்கள்கூட்டி யடிமை

யடிமை கொள்ள வொருப்பட்டபடியும் (47), 'ஸ்வா' என்கிற வசநத்திலே நின்னருளே புரிந்திருந்தே னென்றிருக்கிற க்ருதக்ருத்யனை ஆராற்குறைவுடைய மென்னும்படி வாத்ஸல்யத்தி யாக்கினபடியும் (48), 'ஸவ்யு வாவெஹ்ஃ' என்கிற வசநத்திலே 1'நானே நாநாவித நரகம் புகும்பாவஞ் செய்தேன்' என்றும், 2 'கம்

கொள்ள வொருப்பட்டபடியும்' என்றது ஸர்வ ஶக்தனான பகவான் இவனை ஸர்வபாப மோக்ஷணம் பண்ண நினைத்த போது அதற்கு எவ்விதத்தாலும் ஶங்கை பண்ண வொண்ணாது, அதற்கு ஒருவிதமான ப்ரதிபந்தகங்களும் உண்டாகாது என்கிற திருவுள்ளத்தினாலருளிச் செய்தபடி. வல்லை காண் - நீ ஸமர்த்தன்காண், கோழ்ம் - ஶ்லாக்யமான, சோதி - ஜ்யோதிர்மயமான, உயரத்து - உயர்ந்தலோகத்தில் கூட்டரிய - இதரர்களினால் கூட்டுவதற்கஶக்யங்களான திருவடிக்கள் திருவடிகளை, கூட்டி - என்பிரஸ்ஸில் சேர்த்து, அடிமைகொள்ள - கைங்கர்யத்தை யங்கீகரிக்க, ஒருப்பட்டபடியும் - அவஸரப்ரதீக்ஷனாய் நிற்கிறபடியும். 'ஸ்வா' என்கிறவசநத்திலே நின்னருளே புரிந்திருந்தே னென்றிருக்கிற க்ருதக்ருத்யனை ஆராற் குறைவுடைய மென்னும்படி வாத்ஸல்யத்தியாக்கினபடியும்' என்றது அபிமத பலத்திற்கு வேறொரு உபாயமில்லாமல் ப்ரபத்தி செய்தவன் தன்னுடைய அஶக்த்யாதிகளையும் பகவானுடைய காருண்யாதி குணங்களையும் பார்த்து இனித்தனக்கு ப்ரபத்தி செய்த விஷயத்தில் ப்ராப்தி இல்லாமையையும் பலம் அவஶ்யம் கிடைக்குமென்பதையும் தெரிந்துகொண்டு பலத்திற்கு அவன் கைபார்த்திருக்கிற உத்தரதஶை சொல்லப்படுகிறதென்கிற திருவுள்ளத்தினாலருளிச் செய்தபடி. நின்னருளே புரிந்திருந்தேன் - உன்னுடைய க்ருபையையே எண்ணியிருந்தேன், அதாவது எனக்கு ரக்ஷகமாக எண்ணியிருந்தேன், ஆரால்குறைவுடையம் - வேறொருவரால் என்ன குறைவை யுடையவர்கள், ரக்ஷகாந்தராபேக்ஷை இல்லை என்று தாத்பர்யம். 'வாத்ஸல்யத்தி' கீழே வ்யாக்யானம் செய்யப்பட்டிருக்கிறது. 'ஸவ்யு வாவெஹ்ஃ' என்கிற வசநத்திலே 'நானே நாநாவித நரகம் புகும்பாவஞ் செய்

1 பெரிய திருமொழி-1-9-2. 2 பெரியாழ்வார் திருமொழி-5-4-3.

மன்போலே வீழ்த்தமுக்கு நாட்டிலுள்ள பாவமெல்லாம்' என்றுஞ் சொல்லுகிறபடியே எண்ணாராத்துயர் விளைக்கும் வல்வினையே மாளாதோ என்னும்படி எண்ணிறந்து கிடக்கிறபடியும் (49), 'ஔரக்ஷயிஷ்யாமி' என்கிற வசநத்திலே இருள்தருமா ஞாலத்

தேன்' என்றும், 'நம்மன்போலே வீழ்த்தமுக்கு நாட்டிலுள்ள பாவமெல்லாம்' என்றுஞ் சொல்லுகிறபடியே எண்ணாராத்துயர் விளைக்கும் வல்வினையே மாளாதோஎன்னும்படி எண்ணிறந்து கிடக்கிறபடியும்' என்றது ஸர்வஶப்தம், பஹுவசனம், இவைகளைப் பராமர்ஶித்து ஸர்வஶக்தியான தன்னொருவனாலேயே நிவ்ருத்தி செய்யக்கூடியதே ஒழிய வேறொருவரால் இது நிவ்ருத்தி செய்ய முடியாதென்று ஏற்படுகிறது என்கிற திருவுள்ளத்தினாலருளிச் செய்தபடி. நானே - நான் ஒருவனே, நாநாவித நரகம்புகும் - ஸர்வேஶ்வரனால் ஸ்ருஷ்டிக்கப்பட்டிருக்கும் அனேகவிதமான நரகங்களில் ஒன்றும் விடாமல் ப்ரவேஶிக்கும்படியான, மற்றொருவர் கூட ப்ரவேஶித்தால் துக்காதிகள் மட்டுப்படுமாகையினால் அப்படிக்கில்லாமல் நானொருவனுமே நின்றனுபவிக்கும்படியான, பாவம்செய்தேன்-பாபங்களைப் பண்ணினேன். அன்றிக்கே பகவந்நாமங்களுக்கு எவ்வளவு பாபங்களைப் போக்கடிக்கக்கூடிய ஶக்தி இருக்கிறதோ அவ்வளவுபாபங்களை ஒருவரும் பண்ணமுடியாது என்று ப்ரமாணங்கள் சொல்லுகின்றனவே. அப்படிக் கல்லாமல் பகவந்நாமங்கள் பூர்ணமான ஶக்தியை உபயோகிக்கும்படியான பாபங்களை நானொருவனேசெய்தேன், இப்படிப்பட்டவன் வேறொருவருமில்லை என்று தாத்பர்யமாகவுமாம். நம்மன்போலே - யமன் போல, வீழ்த்து - கீழேதள்ளி, அமுக்கும் - அமுக்கிக்கொண்டிருக்கிற, நாட்டிலுள்ள - இந்தப்பூமியிலுள்ள, பாவமெல்லாம் - எல்லாப் பாபங்களும், தன்னொருவருடைய பாபமாத்திர மன்றிக்கே தானொருவர் பகவானை யாஶ்ரயிக்க 'கேசவன் தமரில்'படியே தன்னுடைய அநுபந்திகளினுடைய பாபங்கள் நசித்ததைத் திருவுள்ளம்பற்றி 'நாட்டிலுள்ள' என்கிறார். எண்ணாரா - எண்ணி முடியாத - கணக்குக்கடங்காத, துயர் — துக்கங்களை, விளைக்கும் - உண்டாக்குகிற, வல்வினையே - பாபங்கள் மாத்திரம், மாளாதோ- நசிக்காதோ. 'ஔரக்ஷயிஷ்யாமி' என்கிற வசநத்திலே இருள் தருமா ஞாலத்துளினிப்பிறவி கழிந்து மருளொழிந்த மடநெஞ்ச

துளினிப் பிறவி கழிந்து மருளொழிந்த மடநெஞ்ச முடையார்க்கு வேண்டிற்றெல்லாந்தரும் வள்ளல் மணி வண்ணன் விண்ணுல கந்தர விரைந்து சார்ந்த விருவல் வினைகளுஞ் சரித்து மாயப் பற்றறுத்து தீர்ந்து தன்பால் மனம் வைக்கத்திருத்தி வீடு திருத்து

முடையார்க்கு வேண்டிற் றெல்லாந் தரும் வள்ளல் மணி வண்ணன் விண்ணுலகந்தர விரைந்து சார்ந்த விருவல்வினைகளுஞ் சரித்து மாயப்பற்றறுத்து தீர்ந்து தன்பால் மனம் வைக்கத்திருத்தி வீடுதிருத்துகிறபடியும்' என்றது பாபநிவ்ருத்திமாத்திரமன்றிக்கே ஸர்வபாப நிவ்ருத்திவந்தவுடன் பரமபுருஷார்த்தத்தில் பர்யவஸான மொழிய நடுவில் ஒரு விளம்பாதிகள் இல்லை, கைவல்யாதிகளில் ஸர்வபாப நிவ்ருத்தியில்லை, ஆகையினால் ஸர்வபாபங்களினின்றும் விடுவிக்கிறேன் என்றது பரிபூர்ண பகவதநுபவமாகிற பரமபுருஷார்த்தத்தையே குறிக்கிறது என்கிற திருவுள்ளத்தினாலருளிச்செய்தபடி. இருள்தருமாஞாலத்துள் - அஜ்ஞானத்தைக் கொடுக்கிற விஸ்தாரமான பூமியில், இனி - இதற்குமேல், பிறவி - ஜன்மங்கள், கழிந்து - நசிக்க உத்தேசித்து, இத்தால் ஜன்மாந்தர வ்யவதானங்களினால் உண்டாகும் விளம்பமில்லை என்றேற்பட்டது. மருள் - அஜ்ஞானத்தை, ஒழிந்த - நாசஞ்செய்த, மடநெஞ்சமுடையார்க்கு - அவரவர்களுக்கு ஸ்வாதீனமான மனத்தை யுடையவர்களுக்கு, வேண்டிற்றெல்லாம் தரும் - அவர்கள் அபேக்ஷித்த எல்லாப் பலத்தையும் தரக்கூடிய, வள்ளல் - உதாரனுகிய, மணிவண்ணன் - நீலரத்னம் போன்ற வர்ணத்தை யுடைய ஸ்ரிய:பதி, விண்ணுலகந்தர - பரமபதத்தைக்கொடுக்க, விரைந்து - த்வரித்துக்கொண்டு, இதினால் கைவல்யாதி விளம்பமில்லை என்பதேற்பட்டது. சார்ந்த - இவனை ஆஸ்ரயித்தவைகளான, இருவல்வினைகளும் - புண்யபாபரூபங்களான இரண்டுவித பாபங்களையும், சரித்து - போக்கடித்து, மாயப்பற்றறுத்து - ப்ரக்ருதி ஸம்பந்தத்தை யறுத்து, தீர்ந்து - பரிசுத்தனாய், தன்பால்மனம் வைக்கத்திருத்தி - தன்னிடத்தில் மனதை வைக்கும்படியாகச்செய்து, 'இருவல் வினைகளுஞ் சரித்து' என்பதற்கு இவர்களை விட்டு விலக்கி என்றர்த்தம். அதாவது உபாயாரம்ப தசையிலேயே இவர்களை விட்டுவிலக்கி வைக்கிறான் என்கிற ப்ரமாணம் இக்கனுஸந்தேயம். 'மாயப்பற்றறுத்து' என்பதற்கு ப்ரக்ருதியி

சிறப்படியும் (50), '[illegible]' என்கிற வாக்யத்திலே உழலையென்பிற் பேய்ச்சி முலையூடவனை யுயிருண்டான் கழல்களவையே சரணாகக்கொண்டு செய்த வேள்வியன் திருமாற்றலைக் கொண்ட நங்கட் கெங்கே வருந் தீவினையே கூட்டரிய திருவடிக் கட் கூட்டினை யான் கண்டேனே என்னும் தெளிவுற்ற சிந்தையாலே தேறி [illegible] [illegible]த்தாலே [illegible] [illegible]ங்களை [illegible]க்குமளவிலும் [illegible] [illegible]யற்ற [illegible] [illegible]த்தாலே [illegible]ருப்பிருக்கும்படியும் (51), [illegible]மாக [illegible]

[illegible]ண்டான [illegible] நிவ்ருத்திசெய்து என்றர்த்தம். தீர்ந்து - [illegible]யாய். 'திருத்தி' என்பதற்கு ப்ரபத்தி பண்ணும்படி செய்து என்றர்த்தம். வீடுதிருந்துகிறபடியும் - பரமபதத்தை யலங்கரிக்கிறபடியும். '[illegible]' என்கிற வாக்யத்திலே உழலையென்பிற் பேய்ச்சி முலையூடவனையுயிருண்டான் கழல்களவையே சரணாகக்கொண்டு செய்த வேள்வியன் திருமாற்றலைக் கொண்ட நங்கட் கெங்கேவருந் தீவினையே கூட்டரிய திருவடிக்கட் கூட்டினை யான் கண்டேனே என்னும் தெளிவுற்ற சிந்தையாலே தேறி [illegible] [illegible]த்தாலே [illegible] [illegible]ங்களை [illegible]க்குமளவிலும் [illegible] [illegible]யற்ற [illegible] [illegible]த்தாலே [illegible]ருப்பிருக்கும்படியும்' என்றது பகவானுடையவார்த்தையில் [illegible]த்திலும் அவனுடைய ஜ்ஞாநஶக்த்யாதி குண [illegible]த்திலும் தனக்குப் பரம புருஷார்த்தம் கையிலிருப்பதாகக்கண்டு, இங்கிருந்த காலத்திலும் வர்ணாஶ்ரம தர்மங்களை அநுஷ்டானம் செய்தபோதிலும் தேவதாந்தர ஸம்பந்தம் முதலிய ப்ரத்யவாயம் வாராதபடியும் தெரிந்து, 'இங்கே திரிந்தேற் கிழுக்குற்றென்' இத்யாதிகளிற்படியே இங்கும் பரமப்ராப்ய கைங்கர்யம் செய்கிறோம், லோகாந்தரத்திலும் பரம புருஷார்த்தமும் ஸித்தமாக இருக்கிறது என்று கிர்ப்பாஜைப் கிர்ப்பயஜைப் இரு என்றருளிச்செய்யப்படுகிறது என்கிற திருவுள்ளத்திலே லருளிச்செய்தபடி. உழலை - உழலைமரம், அதாவது கோபுரவாசல் தாப்பாள், அதற்கு ஸத்ருஶமான, என்பில்-எலும்புகளையுடைய, இத்தால் தேஹத்தினுடைய ஸ்தௌல்யம் உபலக்ஷிக்கப்படுகிறது.

பேய்ச்சி-பூதனையினுடைய, முலையூடு-ஸ்தனத்தின் மத்யமார்க்கமாக, அவளாயுளுண்டான்-அவளுடைய ப்ராணனையுண்டவனாகிய க்ருஷ்ணனுடைய, கழல்களவையே-திருவடிகளையே, சரணாகக்கொண்டு - உபாயமாகக்கொண்டு, செய்தவேள்வியன்-செய்யப்பட்ட ஆத்மஸமர்ப்பணமாகிற யாகத்தையுடையவன். திருமால் தலைக்கொண்ட - ஸ்ரிய:பதியை ஶிரஸ்ஸில் தரித்துக்கொண்டவர்களாகிய, அன்றிக்கே ஸ்ரிய:பதியாலே தன்னுடைய தலைவணங்கி தன்னுடைய பரமாக ஏறிட்டுக்கொள்ளப்பட்ட, நங்கட்கு-நமக்கு, தீவினை - பாபம், எங்கேவரும்-எப்படிவரும். கூட்டரிய திருவடிக்கள் — ஓழ வ்யாக்யாதம். கூட்டினை - இரண்டை, யான் கண்டேன் - நான் பார்த்தேன். இது பலம் ஸித்தம் என்பதினால் உண்டாகும் அநுஸந்தானம். என்று தெளிவுற்ற சிந்தையாலே - இப்படிப்பட்ட ஸந்தேஹமில்லாத நிஶ்சயமான எண்ணத்தினாலே, தேறி - தைர்யத்துடனிருந்து, யாவச்சரீரபாதம் - இந்தச் ஶரீரம் விடும் வரையிலும், ஆஜ்ஞாநுபாலநத்தாலே - பகவானுடைய ஆஜ்ஞையைப் பரிபாலனம் செய்யவேண்டுமென்கிற எண்ணத்தினாலே, அதாவது அந்த எண்ணத்துடன் நித்யகர்மாநுஷ்டானங்களைப் பண்ணுவதினாலே என்று தாத்பர்யம். [illegible] ஶப்தங்களை - அந்த நித்ய கர்மாநுஷ்டானங்களில் அநுஸந்தேயமாகிற அக்னி, இந்திரன், முதலிய ஶப்தங்களில், அந்யதேவதாஸம்பந்தமற்ற - அவர்களுக்கு அந்தர்யாமியான பகவான் ஆராத்யனென்கிற எண்ணத்தினால், இதர தேவதைகள் ஆராத்யர்கள் என்கிற எண்ணமில்லாமல், ஸ்வயம் ப்ரயோஜன கைங்கர்ய ஶீலத்தாலே - முக்தர்களுடைய கைங்கர்யத்தைப்போலே இதின் பலமாக ஒன்றையும் கோலாமல் செய்யப்படும் கைங்கர்யத்தின் அநுபவத்தினாலே. இப்படி சரமஶ்லோகத்தில் பதினொரு அர்த்தங்கள் அருளிச்செய்யப்பட்டதாகிறது. ஆக இப்படி திருமந்திரத்தில் முப்பது, த்வயத்தில் பத்து, சரமஶ்லோகத்தில் பதினொன்றாக ஐம்பத்தொரு அர்த்தங்கள் இந்த ரஹஸ்யத்தில் அருளிச் செய்யப்பட்டதாகிறது. இப்படிக்கருளிச் செய்யப்பட்ட அர்த்தங்களே ஜ்ஞாதவ்யங்களானவற்றில் ப்ரதானமானவைகள் என்றும், எல்லா ரஹஸ்ய ஶாஸ்த்ரங்களிலும் ப்ரதிபாதிக்கப்படுமவை என்றும் அருளிச்செய்து

வசெலபடி (51). இப்படி திருமந்த்ராதிகளில் முற்பட ஸங்க்ஷிக்து மத்யமே சோக்ஷஸாஸ்த்ரங்களில் முதல் நடுவிறுதியாக க்ரமம் மாறிக் கோர்க்கிற வர்ணவ்யூஹங்களுக்கெல்லாம் மாத்ருகை.

கட்டளைக் கலித்துறை.

செம்பொற் கழலிணைச் செய்யா ளமருந்திருவரங்கர்
அன்பர்க்கடிய வராயடி சூடிய நாமுரைத்தோம்
இன்பத்தொகை யெனவெண்ணிய மூன்றி னெழுத் தடைவே
ஐம்பத்தொரு பொருளாருயிர் காக்கு மமுதெனவே. 13

கொண்டு நிகமனம் செய்தருளுகிறார்—'இப்படி' என்றாரம்பித்து. 'திருமந்த்ராதிகளில் - திருமந்திரம், த்வயம், சரம ஸ்லோகம், இவைகளில், முற்பட ஸங்க்ஷிக்து மத்யமே - முதலில் சொல்லப்படுகிற அர்த்தங்களை, அதாவது ஸங்க்ரஹமாக சொல்லப்படுகிற அர்த்தமே, மோக்ஷஸாஸ்த்ரங்களில் - மோக்ஷம், தது பாயம், இவைகளை நிரூபிக்கும் வேதாந்த ஸாஸ்திரங்களில் முதல் நடு விறுதி-ஆரம்பம், மத்தியம், கடைசி, 'க்ரமம் மாறிக்கோர்க்கிற வர்ணவ்யூஹங்களுக்கெல்லாம்' என்பதினால் இவ்வர்த்தங்களை உபநிஷத் முதலியவைகளில் முதல், நடுவு, கடைசி, இவைகளில் மாற்றிப் பதங்களை ப்ரயோகித்து வெவ்வேறு க்ரமங்களாகச் சொல்லப்படுகிறதே ஒழிய அர்த்தங்களில் பேதமில்லை என்று தாத்பர்யம். 'மாத்ருகை' என்பதற்கு இதுவே மாத்ருகா ஸ்தானம். இதினால் மற்றவை அர்த்தாந் ஸித்தங்கள் என்று தாத்பர்யம்.

இந்த ரஹஸ்யம் திருமந்திரம் முதலிய ரஹஸ்யத்ரயங்களின் அர்த்தானுஸந்தானம் செய்வதில் நிஷ்டையுடையவர்களான பாகவதர்களின் நியமனத்தினால் செய்யப்பட்டதென்றும், இதற்கு ரஹஸ்யமாத்ருகை என்று திருநாமம் சாற்றியதற்குக் காரணத்தையும் ஒருபாட்டா லருளிச்செய்கிறார்—'செம் பொற்கழல்' என்றாரம்பித்து. செம் - சிவந்த, பொன் - பொன்களையுடைய, அதாவது ஸ்வர்ணமயமான பூஷணங்களையுடைய, அன்றிக்கே பொன்போல் ஸர்வ புருஷார்த்த ஸாதனமான என்றர்த்தமாகவுமாம். கழலிணை - இரண்டு திருவடிகளையுடைய, செய்யாள் - பெரிய பிராட்டியார், அமரும் - நித்யவாஸம் செய்

கிற, திருவரங்கர் - ஸ்ரீரங்கநாதனுடைய, அன்பர்க்கு - பக்தர்களுக்கு, அடியவராய் - தாஸர்களாய், அடி சூடிய - அந்தப் பாகவதர்களின் திருவடிகளை ப்ரஸாவஹித்துக்கொண்டிருக்கிற, நாம், இன்ப - ஆநந்தத்தின், தொகை - சேர்க்கை, என - என்று நினைத்து, எண்ணிய - நம் பூர்வாசார்யர்கள் அநுஸந்தானம் செய்த, மூன்றின் - ரஹஸ்யத்ரயங்களின், ஆருயிர் - ஜீவாத்மாக்களை, காக்கும் - ரக்ஷிக்கிற, அமுதென - அம்ருதமென்று சொல்லப்படுகிறதாயும், எழுத்தடைவே - மாத்ருகாக்ஷரங்களின் க்ரமத்தை யநுஸரித்ததாயுமிருக்கிற, அதாவது மாத்ருகாக்ஷரங்கள் ஐம்பத்தொன்று என்கிற ஸங்க்யையுடைத்திருக்கிறாப்போலே, ஐம்பத்தொரு பொருள் - ஐம்பத்தொரு அர்த்தங்களை, உரைத்தோம்- சொன்னோம். 'செம்பொற் கழலிணை' என்பதினால் இழியும் துறையாகிய திருவடிகளின் போக்யதாதிசயமும், ஸர்வபலப்ரதத்வமும் ஸூசிதம். இத்தால் 'நாஹம் ஜாநாமி கேயூரே நாஹம் ஜாநாமி குண்டலே। நூபுரே த்வபிஜாநாமி நித்யம் பாதாபிவந்தநாத்' என்கிற இளைய பெருமாளுடைய நிஷ்டையையுடையவர்கள் என்பதும் ஸூசிதமாயிற்று. 'செய்யாளமரும் திருவரங்கரன்பர்க்கு' என்பதினால் அவரைப்போலே சிலநாள் பிரித்தடிமை செய்யாதவர்களாய் 'திருவில்லாத் தேவரைத் தேறேல் மின்தேவு' என்கிறபடியே சேர்த்தியிலே அடிமை செய்யப் பெற்றவர்கள். அந்தச் சேர்த்தியை யநுபவிக்கையாகிற ஆநந்தாநுபவத்திலேயே மூழ்கினவர்கள் என்பது ஸூசிப்பிக்கப்பட்டது. 'ஒண்டொடியாள் திருமகளும் நீயும்', 'நீயும் திருமகளும் நின்றாயால்', 'கோலத் திருமாமகளோடு' இத்யாதிகள் இங்கு விவக்ஷிதம். 'செய்யாளமரும் திரு' என்பதினால் 'திருவுக்கும் திருவாகிய செல்வா' என்கிறபடியே லக்ஷ்மியும் ஆசைப்பட்டு நித்யவாஸம் செய்யும்படி அவனுக்கும் திருவாயிருக்கும்படி சொல்லப்படுகிறது. அன்றிக்கே செய்யாள் அமருகிறதாகிற ஸம்பத்தையுடைய என்றர்த்தமாகவுமாம். அப்பொழுது 'ஸ்வத: ஸ்ரீஸ்த்வம்', 'ஸ்வேத கலிவேஷ்வோதித பாதிவஸ்ரியா' இத்யாதிகள் இங்கு விவக்ஷிதம். 'அடியவராய்' என்பதினால் 'வராகம் ஸவலூ லூநம் யதீம் ஸ்ரியா ஜுஷ்டம் ஸஹஸ்ரியா வேத: । கவிவேதவேசாவேசே ராமாநவேபு:' என்று

இவர் தம்மாலேயே யருளிச்செய்யப்பட்டபடியே ஸ்ரிய:பதிக்கு அடிமை பூண்டவர்களான பாகவதர்களுக்குத் தானடிமை பூண்டது சொல்லப்பட்டதாகிறது. இத்தால் 'பேசுவாரடியார்கள் தம்மை விற்கவும் பெறுவார்களே' என்கிறபடியே பாகவதர்களுக்குத் தாம் க்ரயணீய ஶரீரராயிருந்தபடி அருளிச்செய்யப்பட்டதாகிறது. 'ஆளவந்தாரடியோம்,' 'நாதமுனி கழலே நாளுந் தொழுதெழுவோம் நமக்கு', 'ராமாநுசமுனி இன்னுரைசேர் சீரணிசிக்கைதனிலேனும்' என்றிவர் தாமும், 'நன்று சூட்டும் விதியெய்தினம் என்ன குறை நமக்கே' என்று ஆழ்வாரும் தங்களுக்குண்டான பாக்யாதிஶயத்தை யநுஸந்தானம் செய்வதினாலுண்டாகிய கௌரவாதிஶயத்தினால் தங்களையே பஹுமானித்துப் பேசுவதுண்டு. அதைப்போலவே 'அன்பர்க்கடியவராகிய' பெருமையை யநுஸந்தானம் செய்து அதினால் தம்மையே கௌரவித்து 'நாம்' என்று பஹுவசனமாயருளிச்செய்தபடி. அன்றிக்கே நம்மாழ்வார் முதலாக அப்புள்ளார் வரையிலான எல்லா ஆசார்யர்களுக்கும் அடியவரான தாம் அந்தந்த ஆசார்யர்களுக்கு அடியவராகிய அவஸ்தா பேதங்களையிட்டுத் தம்மையே பஹுவாக நினைத்தருளிச் செய்கிறாராகவுமாம். அதுவுமன்றிக்கே இவ்வளவு ஆசார்யர்களுக்கும் 'அஹம் ஸர்வம் கரிஷ்யாமி'யைப்போல தாமொருவரே எல்லா அடிமையும் செய்யவேண்டுமென்கிற அபிநிவேஶாதிஶயத்தினால் 'நிவாஸ ஶய்யாஸந', 'சென்றால் குடையாம்', இத்யாதி ந்யாயத்தினாலே அநேக ஶரீர பரிக்ரஹம் பண்ணவேண்டுமென்கிற அபிஸந்தியின் மிகுதியால் அப்படியே அநேக ஶரீரத்தை யடைந்தவராக நினைத்து பஹுவசனமாக அருளிச் செய்திருக்கிறாராகவுமாம். அதுவுமன்றிக்கே 'தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்' என்கிற ப்ரபன்ன ஜன ஸந்தான கூடஸ்தரையும் சேர்த்துக்கொண்டு அவராதியாகத் தம்மளவாகக் கேவல பாகவத ப்ரீத்யர்த்தமாக க்ரந்தங்களை யருளிச்செய்தோம் என்று த்ருஷ்டாந்தார்த்தமாக ஆழ்வாரையும் சேர்த்துக்கொண்டருளிச் செய்கிறாராகவுமாம். 'இன்பத் தொகை யென' என்பதினால் பகவானுடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளை ப்ரதிபாதிக்கையாலே மதுக்ஷீரந்யாயமாக ஆந

ஸம்நாஹ்ருத்யைதேத்நிய ஸ்யாமாஜிதஷ்யேய
ஸந்த்ருஷ்டா ஸூக்திகைஸ் ஸம்ப்ரதாயைர்ஸ்ருதேவா: |
ஸம்ஶ்ரவதாம் நிஹிதஹ்ருதே ஸாரஸீகிதா.
ஸர்வஸாரா பவதி ரஹஸ்யமாத்ருகா ||

ர்த்தங்களெல்லாம் தொகையாகச் சேர்ந்திருக்கின்றன என்பது ஸூசிப்பிக்கப்படுகிறது. இத்தால் ரஹஸ்யத்ரயங்களின் அர்த்தாநுஸந்தானம் ஸ்வயம் ப்ரயோஜனமென்று அதை அநுஸந்தானம் செய்துகொண்டிருக்கிற அந்தப் பாகவதர்களின் நியமனத்தினால் அவர்களின் அநுஸந்தானத்தின் ஸௌகர்யத்திற்காக இதை யருளிச்செய்தோம் என்பது ஸூசிப்பிக்கப்படுகிறது. 'எண்ணிய' என்கிற இடத்தில் 'திருவரங்கர் அன்பர்' என்பதைச் சேர்த்துக்கொள்ளவேண்டும். அதாவது பூர்வாசார்யர்கள் அநுஸந்தானம் செய்துகொண்டிருந்த அர்த்தங்களையே அவர்களுடைய அநுஸந்தான ஸௌகர்யார்த்தமாக அருளிச்செய்தபடி என்று தாத்பர்யம். 'எழுத்தடைவே' என்பதினால் ஸ்ரீமந் ந்யாயஸித்தாஞ்ஜனத்தில் 'ஸக்ஷகாரேண ஸஹ பஞ்சாஶதேகாக்ஷர:' என்று அருளிச்செய்திருப்பதினால் மாத்ருகாக்ஷரம் ஐம்பத்தொன்று என்கிற க்ரமத்தை யநுஸரித்து இங்கும் அர்த்தங்கள் ஐம்பத்தொன்றாக வருளிச்செய்யப்பட்டது. மாத்ருகாக்ஷரங்கள் ஶப்தங்களெல்லாவற்றிற்கும் ஸங்க்ரஹமாயிருப்பதைப்போல் இந்த ஐம்பத்தொரு அர்த்தங்களும் எல்லா அர்த்தங்களுக்கும் ஸங்க்ரஹம் என்கிற ஸாம்யத்தையிட்டு இதற்கு 'ரஹஸ்ய மாத்ருகை' என்கிற திருநாமம் சாற்றப்பட்டது என்பது ஸூசிதம். 'ஆர் உயிர் காக்கு மமுதெனவே' என்பதினால் வாராஹபுராணஶ்லோகத்தைப்போல இதுவும் 'ஸம்ஸாராக்நி விதீபனவ்யபகதப்ராணாநாம் ஸஞ்ஜீவிநீ' என்பது அபிப்ராயத்தில் கொள்ளப்பட்டது. இத்தால் இந்த அர்த்தாநுஸந்தானம் ஸ்வயம் ப்ரயோஜனமானது என்பதும் பரமப்ரயோஜனமாகிற மோக்ஷத்திற்கு ஸாதனம் என்பதும் வ்யஞ்ஜிதம்.

இதற்குமேல் இந்த ரஹஸ்யாநுஸந்தானம் ரஹஸ்யத்ரயங்களின் அர்த்தாநுஸந்தானத்தில் நிஷ்டையுடையவர்களுக்கு

அல்பம் உபஜீவ்யம் என்றிதின் ப்ரயோஜனத்தை வ்யக்தமாயருளிச்செய்கிறார்—'ஸஹஸ்ரஶோ விதிதை:' என்றாரம்பித்து.

இயம்-இந்த, ரஹஸ்ய மாத்ருகா-ஸ்ரீமத் ரஹஸ்யமாத்ருகையானது, ஸஹஸ்ரஶோ விதிதை: - அநேக விதமாக ச்ரவணம் பண்ணினவர்களாயும், அத்ய - இப்பொழுது, த்ருதஸ்ப்ருஹை: - ஸங்க்ரஹத்தில் ஆசையுடையவர்களாயும், அநுக்ரமாத் - வரிசையாக, அநுதிநம் - தினந்தோறும், போக - ஸுகத்தை அனுபவிப்பதில், ஸ்ப்ருஹாளுபி:-ஆசையையுடையவர்களாயும், நாதபதே-ப்ரபத்தியினிடத்தில், நிஹிதபரை:-வைக்கப்பட்ட, ரக்ஷண பாரத்தையுடையவர்களுமான ப்ரபன்னர்களினால், உதீரிதா - சொல்லப்பட்டதாய்க்கொண்டு, ஸதா ஸுகா - ஆநந்தத்தைக் கொடுக்கிறதாக, பவதி - ஆகிறது. 'ஸஹஸ்ரஶோ விதிதை:' என்பதற்கு 'ஸஹஸ்ரஶ: ஶ்ருதம் ஸஹஸ்ரஶ: ஶ்ருதம்' என்கிறபடியே ரஹஸ்யத்ரயங்களின் ஸாரார்த்தத்தை அநேகம் தடவை கேட்டவர்கள் என்றர்த்தம். 'அத்ய' என்பதற்கு பர்யாஸம்செய்து ஸ்வயம் ப்ரயோஜனமான காலக்ஷேபார்த்தமாக ப்ரமமில்லாமல் குணானுபவங்களை பண்ணிக்கொண்டிருக்கிற போக மோக்ஷதஶாபன்னமான ஸமயத்தில் என்று தாத்பர்யம். 'த்ருதஸ்ப்ருஹை:' என்பதற்கு க்ருஷி பண்ணாதே உண்ண இருக்குமவன் க்ருஷி சிந்தையை விடுமாப்போலே அதிக ப்ரமமில்லாமல் பகவத்குணானுபவம் பண்ணுவதில் ப்ரீதியுடையவர்கள் என்று தாத்பர்யம். 'அநுக்ரமாத்' என்பதற்கு ஸங்க்ரஹருசிகளாயிருந்தபோதிலும் பதங்களின் ஸாரார்த்தங்களை விடாமல் அநுஸந்திக்க வேண்டுமென்கிற ஆசையையுடையவர்கள் என்று தாத்பர்யம். இத்தால் ஸ்ரீமத் ரஹஸ்யபதவீ, ஸ்ரீமத்ரஹஸ்யநவநீதம், அவர்களின் அனுபவத்திற்கமையாது. பதங்களின் வரிசை ப்ரகாரம் ஸாரார்த்தங்களை ப்ரகாசப்படுத்துகிற இதுவே ஸுகாவஹம் என்பது தெரிவிக்கப்படுகிறது. 'அநுதிந போகஸ்ப்ருஹாளுபி:' என்பதற்குத் தினந்தோறும் ரஹஸ்யத்ரயங்களின் அர்த்தங்களையனுஸந்தானம் செய்யவேண்டுமென்கிற ஆசையுடையவர்கள் என்றர்த்தம். இத்தால் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் முதலிய விஸ்தார க்ரந்தங்கள்

ரஹஸ்யமாத்ருகா ஸேயம் வேங்கடேஶவிநிர்மிதா ।
விம்ருஶ்ய தேஶிகவரா ஜ்ஞேயார்த்தவ்ருத்திவ்ருத்தயே ॥

இதி கவிதார்க்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய
ஶ்ரீமத்வேங்கடநாதஸ்ய வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு

ஶ்ரீமத் ரஹஸ்யமாத்ருகா ஸம்பூர்ணா.



கவிதார்க்கிகஸிம்ஹாய கல்யாணகுணஶாலிநே ।
ஶ்ரீமதே வேங்கடேஶாய வேதாந்தகுரவே நம: ॥

॥ ஶ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம: ॥

சேர்துப்புத்திருவேங்கடமுடையான் திருவடிகளே ஶரணம்.



அவர்களுக்கு ஸுகாவஹமாகாது என்பதும் தெரிவிக்கப்படுகிறது. 'ஜ்ஞாதவந்தோ நிஹித ஹ்ருதயா:' என்பதினால் அவர்கள் க்ருதக்ருத்யர்கள் என்பது சொல்லப்படுகிறது. ஆதலால் விஸ்தாரமான க்ரந்தங்கள், ஆக்ஷேப ஸமாதானங்கள், அவர்கள் அநுபவத்திற்கு ஆவஶ்யகங்களில்லை என்பது தெரிவிக்கப்படுகிறது. ஆக இத்தால் க்ருதக்ருத்யர்களாய் ரஹஸ்யத்ரயார்த்தத்தில் நிரதர்களாய், இத: பூர்வம் ரஹஸ்யத்ரயார்த்தங்களை விஸ்தாரமாகக் கேட்டுத் தெளிந்தவர்களாய், அப்படி விசாரித்து நிஷ்கர்ஷிக்கப்பட்ட அர்த்தங்களைச் சேர்த்தநுஸந்திப்பதில் ஆசையுடையவர்களுக்கு இது ஸுகாவஹம் என்றருளிச் செய்யப்பட்டதாகிறது.

இதற்குமேல் ஆசார்ய கடாக்ஷத்தினால் ஸ்ரீரங்கத்தில் தம்மால் இது அருளிச்செய்யப்பட்டதென்று நிகமனம் செய்தருளுகிறார்— 'ரஹஸ்யமாத்ருகா' என்றாரம்பித்து. ஸேயம்-அப்படிப்பட்ட இந்த, ரஹஸ்யமாத்ருகா-ஸ்ரீமத் ரஹஸ்யமாத்ருகை என்கிற இந்த க்ரந்தமானது, விம்ருஶ்ய தேஶிகவரா- பரிசுத்தர்களான ஆசார்யர்களை பாஶ்ரயித்த, அதாவது 'ஸித்தம் ஸத்ஸம்ப்ரதாயே' என்கிற ஶ்லோகத்திலருளிச் செய்யப்பட்ட லக்ஷணங்களோடு கூடிய ஆசார்யர்களை யடைந்தவராகிய, வெங்

கடிகா விபூஷிதா - வேங்கடநாதனென்கிற வித்வானாகிய ஆசார்யனால், இத்தால் தானும் ஸர்வஜ்ஞர், அப்படிப்பட்ட ஸர்வஜ்ஞர்களான ஆசார்யரிடத்தில் ச்ரவணம் பண்ணினவர், என்கிற பெருமை சொல்லப்பட்டபடியினால் இந்த க்ரந்தத்தின் வைலக்ஷண்யம் ஸூசிப்பிக்கப்பட்டது. ஸஹ்யஜாத்ரு ஸ்ரீரங்கமென்கிற திவ்ய க்ஷேத்திரத்தில், 'ஸாரோத்தாரம் கடயநிதம் ஸம்மதாம யாதி ஸம்ஸம்' என்றிவர் தம்மாலேயே ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயத்திலருளிச்செய்திருப்பது இங்கு ஸூசிதம். 'அறிவிலா மனிசரெல்லா மரங்கமென்றழைப்பராகில் பொறியில்வாழ் நரகமெல்லாம் புல்லெழுந்தொழியுமன்றே' என்றல்லவோ அந்தத் திவ்ய க்ஷேத்திரத்தின் பெருமை ஆழ்வாரால் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது என்று தாத்பர்யம். அப்படிப்பட்ட க்ஷேத்திரத்தில், லிகிதா - எழுதப்பட்டது. அதாவது 'வெள்ளைப்பரி முகர் + × ஓலையிலிட்டனம்' என்கிறபடியே ஆசார்யர்களினால் உபதேசிக்கப்பட்ட அர்த்தங்களே ஒரு ஆநுபூர்வியாய் எழுதப்பட்டதன்றித் தம்மாலே புதிதாக ஒரு கல்பனை பண்ணி எழுதப்பட்டதல்ல என்றிதன் ஸத்ஸம்ப்ரதாய ஸித்தத்வம் அருளிச் செய்யப்பட்டதாகிறது.

திருவஹீந்திரபுரம் செட்லூர் வித்வான் பகவத்விஷயம்
ஸ்ரீ உ.வே. நரஸிம்ஹாசார்யஸ்வாமிகளினால்
செய்யப்பட்ட.

ஸ்ரீமத் ரஹஸ்ய மாத்ருகை வ்யாக்யானம்
முற்றிற்று.

